



தொகுதி : 24

"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

தொகுதி : 24

2019

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை**

இல. 4/1, தோமஸ் லேன்,
மட்டக்களப்பு.

T.P No. : 065-2223297
Fax No.: 065-2224657
e-mail : suriyaw@slt.lk
suriyawomen1991@gmail.com

# THE WOMAN

A Journal Published by
**Suriya Women's Development Centre,**

ஆசிரியை:
**விஜயலட்சுமி சேகர்**

கணினி வடிவமைப்பு:
**த. சங்கர்**

அச்சகம்:
**வணசிங்கா அச்சகம்,**
**496A, திருமலை வீதி,**
**மட்டக்களப்பு.**

விலை : 100/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர்களுடன்...



மற்றுமொரு "பெண்" இதழில் தங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். பெண்கள் சந்தோசங்கள் அனைத்தும் சவால்களின் பின்னேயும் முயற்சிகளின் பின்னேயும் மலர்ந்துள்ளதுபோல் நாம் இழந்தவைகள் அனைத்தும் எமது மௌனங்களின் பின்னேதான் மறைந்து கிடக்கின்றன. இது எமது பெண்களின் வரலாறாகும். இவ்வரலாற்றுப் பாதைகளை பதிந்தபடியே நாம் மேலெழுந்து செல்கிறோம்.

இவ்வாறு "பெண்" தன் பாதையின் பார்வைகளை சேகரித்துக் கொண்டிருக்கும் சமயத்தில்தான் மற்றுமொரு சம்பவம் நிகழ்ந்து விடுகிறது. அது 2019 சித்திரை மாதம் இருபத்தொராம் திகதியும் அதன் பின்னரும் தேவாலயங்களிலும் பொது இடத்திலும், வீடுகளிலும் நடந்த பெறுமதி மிக்க மனித உயிர்களின் இழப்புக்கள்.

இச் சம்பவம் நடக்கும் முன் இருபதாம் திகதி எமக்குள் இருந்த உறவு நிலைகள் அனைத்தும் 21ம் திகதி காலையுடன் தலைகீழாக மாறியது.

சகோதர இனம் சகோதர இனத்திற்கு எதிரியாக்கப்பட்டார்கள். உணவு, உடை, சுகாதாரம், பொருளாதாரம், அரசியல், அறிவு, மொழி என அனைத்தும் விமர்சனத்திற்குள்ளாகி குற்றச் சாட்டுகளுக்குள்ளாக்கப்பட்டன.

கடந்த கால யுத்தங்களின் பின் மானுட சமுதாயம் முற்று முழுதாக மீண்டெழு முன் இவ்வாறு மீண்டும் மீண்டும் முகங்கள் சுழிகளுக்குள் மூழ்கடிக்கப்படுகின்றன. முச்சக் காற்றுக்கள் முறிக்கப்படுகின்றன.

எமது கைகளால் எமது வேர்கள் அறுபட்டுக்கொண்டுள்ளன.

இன்று ஒவ்வொரு வீட்டிலும் ஏதோ ஒரு வகையில் பேதங்கள் பேசும் நிலையே.

தெருவுக்கு தெரு அல்லது வீட்டிற்குள்ளேயே அறைக்கு அறை என எழுப்பப்படும் எல்லைச் சுவர்கள்.

இந் நிலையில்

எதிர்காலத்தில் எவ்வாறான சமூகம் எமக்கு மிஞ்சும்?

இனி அடுத்தடுத்து வரவிருக்கும் தேர்தல்கள், கட்சி மேடைகள்,

"சும்மா ஆடும் பேய்க்கு குங்கிலியம் போட்டாப்போல்" என்று அம்மா சொல்வார்.

அரசியல் மேடைகளில் பாவிக்கப்படும் பேச்சுக்கள், சொற் பிரயோகங்கள்...

எங்கே கொண்டுவிடும் மக்கள் மனதின் குழப்பங்களை?

உண்மைகளை கண்டடையும் தருணங்கள் மிகவும் சொற்பமே

இதுவே பெண்கள் எமது பயங்களாகும்.

ஒவ்வொருவரும் தன்னைத்தானே காந்தியாகவும், புத்தனாகவும், காட்டிக்கொள்ளத் தேவையில்லை. ஒரு நாள் ஒரே ஒரு நாள் மூன்று வேளை உணவுடன், புறம் கூறாத நாவுடன், பேதங்கள் பேசாத பேச்சுடன் பக்கச்சார்பற்ற மனதுடன் நோன்பிருத்தல் முடியுமா?

"எமது சகோதரர்கள் எமது சகோதரர்களுக்கு ஏற்படுத்திய பாரிய துன்பவியல் இதுவாகும்" எனும் உண்மையை எம்மால் உணர முடியுமா?

இந்தப் பாரிய தாக்குதலில் பாதிக்கப்பட்டோரும் அவர்கள் வலிகளும் எம்மோடு இருக்கும் இச் சூழலில் பாதிப்பை ஏற்பத்தியவர்களும், அவர்கள் பயங்களும் அவர்கள் எதிர்காலக் கனவுகளும் கூட எம்மோடுதான் உள்ளன.

ஆகவே இதற்குப் பதில் கூற வேண்டிய எம் பார்வைகள் எவ்வாறு அமையப் போகின்றன? எங்கெல்லாம் மானிட பேதங்கள் வெடிக்கின்றதோ அப் பிளவில் இருந்தே எமது சகோதரித்துவச் சிந்தனையின் விதை துளிர்க்க வேண்டும், இத் துன்பியல் ஓலப் பதிவுகள் படிப்பினையாக வேண்டும் என "பெண்"ணின் கால வெளிகளில் சகோதரிகள் தம் உணர்வுகளை பதித்துச் செல்கின்றனர் இங்கு.

நன்றி

- ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உள்ளே...


» கூற்று : பெண்களின் குரல் - 25 வருடங்கள்
» சர்வதேச பெண்கள் தினம்
» கூற்று ஒரு கண்ணோட்டம்
» பெண்ணில் பெருந்தக்க யாதுள
» அச்சமின்றிய பொழுதுகள்
» சுனிலா அபயசேகரவின் வாழ்வு - பாடல், காதல், அரசியல்
» புடவை உரசும் காலங்கள்
» இலங்கை அரசியலில் பெண்கள்
» சமூகம் மாறுமா?
» பல பெயர் எனக்கு
» கல்லெறி பெண்மீது
» கொடுக்கும் மரம்
» இன்றைய சூழலில்
» காயாத மைகொண்டு
» ஓவியையின் அழகிய கனவு
» மனம் நிறைந்த மல்லி
» புனித நாளின் மணமகள்
» துயர் பகிர்வோம்
» சமதை கடிதம்
» மனித எழுச்சி நிறுவனம்
» வேற்றுமைகள் புலப்படும் அளவிற்கு ஒற்றுமைகள்
» என் அன்பிற்கும்...
» நெருப்பாற்றைக் கடக்கப்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூற்று : பெண்களின் குரல் - 25 வருடங்கள்



சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் 25 ஆண்டுகால நிறைவை (1991-2016) சிறப்பிக்குமுகமாக கூற்று வெளிவந்திருக்கிறது. சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் கடந்த 25 வருட செயல்வாதத்தின் முக்கிய பரிமாணங்களையும், தருணங்களையும் கையகப்படுத்தி அவ் வரலாற்றை ஆவண வடிவில் வெளியிட்டிருக்கிறார்கள் கூற்றின் பதிப்பாசிரியர்களான சித்திரலேகா மௌனகுருவும், மர்லின் வீவர், மற்றும் ஆசிரியர் குழுவினரான அனுராதா இராஜரெட்ணம் சரளா இமானுவல், இ.வினிபிரட் ஜெயசாந்தினி, விஜயலட்சுமி சேகர் ஆகியயோர் கூற்றின் ஆசிரியர் குழுவாக தம் பங்களிப்பை வழங்கியிருக்கிறார்கள்.

**எங்கள் மூச்சுக்காற்றுடன் இணையும் - எம் சகோதரிகளின் சுவாசம் கலந்துள்ள காற்றுக்கே அர்ப்பணம்** என்ற விஜயலட்சுமியின் கவிதையோடு தொடங்கும் இவ்வெள்ளி மலரில் காணப்படும் விடயதானங்களின் உட்சரடாக மூன்று அம்சங்களை 'ஆசிரியை கூறுவது' பகுதியில் காணலாம் அவை,

1. ஒரு நிலை அமைப்பாக சூரியாவின் உருவாக்கச் சூழமைவும், அதன் பயணமும்.
2. சூரியாவின் செயற்பாடுகள்.
3. அலுவலர்களின் படிப்பினைகள், எதிர்கொண்ட சவால்கள் பற்றிய கருத்துகளும், மதிப்பீடுகளும் என சித்திரலேகா குறிக்கிறார்.

மலரினுள்ளே, சூரியா என்ற பெயர் எப்படி வந்தது என்ற காரணத்தை முன்னாள் அலுவலர் ரெஜி டேவிட் மூலமாக அறிந்து கொள்கிறோம். அவர் ஒளிதரும் சூரியனின் பெண்பாலாக சூரியாவைக் கருதியதுடன் ஒளியைத் தேடும் மக்களுக்கு இது ஆழ்ந்த அர்த்தத்தைத் தரும் எனவும் நம்பினோம் என்றார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டு முயற்சியே சூரியாவின் இயங்கு தளம் என்பதை இம் மலரில் காணப்படும் அத்தனை அனுபவப் பகிர்வுகளும் கட்டுரைகளும் நமக்குச் சொல்கின்றன. பெண்கள் கூட்டாக தமக்கான வெளிகளில் இயல்பாக இயங்குவதற்கும், தமக்கான வெளிகளைக் கண்டு கொள்வதற்கும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிறுவனமானது நுண்வெளிகளை உருவாக்கித் தருவதுடன் எதிர்கால தரிசனத்தோடு சகோதரித்துவத்தின் நீண்டதொரு உரையாடலுக்கும் அது வழிவகுக்கிறது என்பதையே சூரியாவின் இந்த 25 ஆண்டுகால செயற்பாடுகள் நமக்கு உணர்த்துகிறது.

கூற்று முழுவதும் காணப்படும் கூட்டு முயற்சிகளும் செயற்பாடுகளும் மலைக்க வைக்கின்றன. ஓவியக் கண்காட்சிகள், வில்லுப் பாட்டுகள், நடமாடும் நூலகங்களை அமைத்தல், நாடகப் பயிற்சிப்பட்டறைகள், குழுவாக நாடகங்களை அமைத்தல், நாடகப் பயிற்சிப் பட்டறைகள், குழுவாக நாடகங்களை உருவாக்குதல் (நிராகரிக்க முடியாதபடி), கவிதா நிகழ்வுகள் (வாருங்கள் தோழியரே வையகத்தை வெற்றி கொள்ள), கண்ணுக்குப்புலனாகாத அரங்க நிகழ்த்துகைகள் (கனகம்மாவின் கதை), பாரமுறி விளையாட்டு, மட்டுநகர் கண்ணகைகள், நிசப்த இரைச்சல், இது எமது படைப்பு, ஒரு பிடி அன்பு, காவலம்மா போன்ற நாடக உருவாக்கங்களையும் சொல்லலாம்.

இதைவிட கலாச்சாரக்குழுவினர் எழுதிய கவிதைகள் 'கனல்', 'வெளிப்படுதல்' என இரு தொகுதிகளாகவும் பாடல்கள் பெண்களின் குரல் என்ற ஒலிநாடாகவும் வெளிவந்துள்ளன. ஜெயந்தி தளையசிங்கத்தின் எமது கலாச்சாரகுழுவின் பயணம், மங்கையின் அரங்கம்-கொதி நிலம். தணிக்கும் ஊற்று, சித்திரலேகாவின் ஒருபோதும் தனித்தல்ல கட்டுரைகள் இக்கூட்டு முயற்சிகளைப் பெரிதும் பிரதிபலிக்கின்றன.

பெண் சஞ்சிகை பற்றிய குறிப்பு முன்னாள் மற்றும் தற்போதைய சூரியா அலுவலர்களின் வாக்குமூலங்கள், அ. இலங்கேஸ்வரி, சு. கல்யாணியின் உரையாடல் வாசுகி, அனுராதாவின் உரையாடல் ஜெயசாந்தியின் சூரியாவின் நூலகமும் ஆவணமாக்கலும் பகுதி, சரளாவின் பெண்கள் மற்றும் சிறுமியருக்கெதிரான பாலியல் வன்முறைகளை எதிர்கொள்ளல் கட்டுரை, யமுனாவும் குழந்தை உம்மாவும் பற்றிய சித்திரலேகாவின் அனுபவப்



பகிர்வு எல்லாம் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பல்வேறுபட்ட சமூக ஆக்கச்செயற்பாடுகளை நம் கண்முன்னால் கொண்டுவருவதுடன் அவர்கள் எதிர்கொண்டதும் கொள்ளவேண்டியிருக்குமான சவால்களையும் எமக்கு உணர்த்துகின்றன.

ஒரு பொருள் பல துண்டு ஓவியங்களில் பரந்து வரையப்பட்ட 'பாய்' அட்டை ஓவியத்தை அருந்ததிரட்ணராஜ் கூற்றுக்காக வரைந்திருக்கிறார். பாய் இழைத்தல் மட்டக்களப்புப் பெண்களிடையே காணப்படும் கைவினைத்திறனாகும். இந்த ஓவியத்தில் மட்டக்களப்பினதும், பெண்களின் கதைகளினதும் வாசனையைக் கொண்டு வர முயன்றுள்ளேன் என்கிறார் அவர்.

மறைந்த மனித உரிமைச் செயற்பாட்டாளரும், 'பெண்நிலை அரசியலையும், எமது கதைகளையும், கனவுகளையும் பகிர்ந்து கொண்ட சுனிலா அபசேகரவிற்கு 25 வருட பெண்களின் குரல்களால் நன்றி தெரிவித்திருப்பது சாலப் பொருத்தமானதே.

பின்னட்டையில் உள்ள லோகநாயகின் கவிதை அப்போதுதான் இந்த இடத்தில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தையும் அதன் பயணத்தையும் அழகாக உருவகிக்கின்றது

**தன்னைத்தானே கிள்ளிப் பார்க்கிறாள்**
**நானா நானா இவள்**
**அப்போதுதான்**
**கடந்து வந்த பாதையை**
**நினைத்துப் பார்க்கிறாள்**
**காலடித் தடத்தினை**

வெள்ளிவிழாக் காணும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்துக்கும், தோழமைகளுக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்.

– **ஆழியாள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச பெண்கள் தினம்

## 08.03.2019

பெண்களின் வாழ்க்கை வரலாற்றைக் கொண்டாடுவோம்.

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு இந்தக் குறிப்பினை எழுதுகின்றேன்.

என் வாழ்வில் உள்ளார்ந்த பிடிப்பினை ஏற்படுத்திய பல்வேறு மனிதர்களை சந்திக்கும் வாய்ப்பு பல நேரங்களில் கிடைத்துள்ளது.

அவர்களைச் சந்திக்கும்போதெல்லாம் அவர்களின் எளிமையான வாழ்வும், சமூகம் சார்ந்த உண்மையான நோக்கங்களும், அக்கறைகளும் அவைசார்ந்து அவர்களின் அர்ப்பணிப்புகளும் எனக்கு அவர்கள் மீதான பிடிப்பை, மரியாதையையும் எப்போதும் ஏற்படுத்தும்.



அவர்களது சமூகம் சார்ந்த அக்கறைகளும் பிரஞ்ஞைகளும் அதன் வெளிப்பாடுகளும் எம்மையும் தொற்றிக்கொள்ள அவை எம் வாழ்விற்கும் உணர்வுகளுக்கும் வலுவான சக்தியை கொடுக்கும் அனுபவமாக இருந்துள்ளதை உணர்ந்துள்ளேன்.

இந்த வரிசையில் சுனிலா அபேசேகரா, பற்றீசியா றெடி (பூரணி பெண்கள் இல்லம்), ரஜனி திரணகம, செல்வி, சிவரமணி போன்றோரை குறிப்பிட விரும்புகின்றேன்.

இவர்களின் மரணங்கள் ஏற்படுத்தும் வெற்றிடம் என்பது குறித்த காலங்களுக்கு சூனியமாக, வெறுமையாக இருக்கும். பின்பு மீண்டும் வழமையான வாழ்விற்கு வந்துவிடுவோம். ஆனால் அவர்கள் தாம் வாழ்ந்தகாலத்தில் ஏற்படுத்திய தாக்கத்தின் பரிமானம் பெறுமதி மிக்கது.

உதாரணத்திற்கு மனித உரிமைச் செயற்பாட்டாளர் சுனிலா அபேசேகரா அவர்களை இந்த இடத்தில் நினைவில் நிறுத்துகின்றேன்.

சோசலிஸ பெண்ணிலை வாதியாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட சுனிலா அவர்கள், ஒரு மனித உரிமை செயற்பாட்டாளருமாவார்.

பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பு (Women & Media Collective), இன்போர்ம் (Inform) என்பவற்றின் இயக்குனர்களில் ஒருவராக இருந்தவர்.

1990களில் கொழும்பில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு மூலகாரணமாக இருந்து இயக்கிய முக்கியஸ்தர். 2009ம் ஆண்டு நடைபெற்ற முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின்போது இலங்கை அரசு மிகவும் கொடூரமான மனித உரிமை மீறல்களை செய்திருந்தது.

அவை குறித்து இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு பொறுப்பு கூறவேண்டுமெனவும் தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வுகளை கொடுக்கவேண்டுமெனவும் சர்வதேச அரங்குகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் கொடுத்துக்கொண்டிருந்தவர்.

அப்போது அவர் கடும் புற்றுநோயினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தவர். அத்தோடு இலங்கை அரசாங்கத்தினால் உயிர் அச்சுறுத்தலுக் குள்ளாகி நாட்டில் வாழ முடியாது வேறு நாட்டில் சில காலம் வாழ்ந்துகொண்டிருந்தவர்.

நோயினால் பாதிக்கப்பட்டு இறக்கும் தறுவாயில் இருந்த இறுதித் தருணத்திலும் தான் வாழ்ந்த சமூக மக்கள் மீது உண்மையான நேசிப்பு டனும் அக்கறையுடனும் இறுதிவரை வாழ்ந்தவர்.

சுனிலா அபேசேகரா பற்றீசியா றெடி, ரஜணி திரணகம, செல்வி, சிவரமணி போன்றவர்கள் எப்போதும் என்நேரமும் சமூகத்தின் மீதான அக்கறைகளோடும் சமூகத்தின் மீது அதிகாரம் செலுத்தும் மேலாண்மைக்குகளுக்கு எதிராகவும் குரல் கொடுத்துக்கொண்டே இருந்திருக்கிறார்கள். இவர்கள் எப்போதும் மற்றவர்களின் பாதுகாப் பிற்கும் நம்பிக்கைகளுக்கும் உரியவர்களாக வாழ்ந்துள்ளனர்.

இவர்கள் எப்போதும் எங்கள் வாழ்வில் நினைவுகளோடு வாழ்பவர்கள்.

இவர்கள் வாழ்ந்த காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு நன்றி நினைவுகூரலையும் மற்றும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களின் உரிமைக்காகவும் விடுதலைக்காவும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பெண்கள் அனைவருக்கும் சர்வதேச பெண்கள் தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்..

**– ஜெயந்தி தளையசிங்கம்**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூற்று
# ஒரு கண்ணோட்டம்



அன்னையர் முன்னணியின்
மௌனப் பேரணி யாழ்ப்பாணம்
1984



**சூ**ரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் இருபத்தைந்து வருட அடையாளம். கூற்று என்பதற்கு நூலிலேயே அறிக்கை, ஒரு பிரகடனம், யமன், தர்ம தேவதை எனப் பொருள் கொள்ளப்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உண்மை தான் 'கூற்று'.

கடந்த காலச் செயற்பாடுகளை, நிகழ்கால செயலாற்றுகைகளை எதிர் காலப் பணிகளை பேசியுள்ளது. பெண் நினைத்தால் கூற்றுவனும் ஆகுவாள் தர்ம தேவதையும் ஆகுவாள்.

கூற்றுக்கள் சில இங்கே, விஜயலட்சுமி சேகரின்,

**"மூச்சுக் காற்றுடன் இணையும் எம் சகோதரிகளின் சுவாசம் கலந்துள்ள காற்றுக்கே" அர்ப்பணம்**

வசந்தகலாவின் கூற்று

**"நீதிக்கும் உரிமைக்கும் இணையும் உயர் ஆலமரக் கிளைகள் நாம்"**

எமக்காக, எம்மில், எம்மிடமிருந்து உயிர்ப்புடன் செயற்படும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் கூற்று. என்னில், பெண்ணில், அவள் உயிர் வாழ்தலில், அர்த்தமான கணங்களின் வெகுமதிகள், பெறுமதிகள் இங்கு பதிவு செய்யப்பட்டுள் ளன. எம்மை நாம் பார்க்கும் பார்வையின் பரிணாமங்கள், எங்களால் வடிவமைக்கப் பட வேண்டும் என்ற உறுதி 'கூற்று' வாயிலாக அனைத்துப் பெண்களும், பெண்கள் அமைப்புக்களும், வலையமைப்புக்களினாலும் உள்வாங்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

கூற்று பலபக்கம் கொண்டது. எனினும் வசதிகள் கருதி 9 பகுதிகளைக் கொண்டதாக அதனை கையகப்படுத்தி 25 வருடங்களையும் எம் கண்முன் கொண்டு வந்துள்ளது. காலம், கலாசாரச் செயல்வாதம், தெரிந்து கொள்ள, எனது வேலை, எனது நேரம், எனது பெறுமதி, சமாதானம் எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கு, நிசப்த இரைச்சல், வாருங்கள் தோழியரே வையகத்தை வெற்றி கொள்ள, காலத்தைக் கையகப்படுத்தல், எமது வெளிகள், எமது பலம் என்ற தலைப்புக்களின் கீழ் பகிர்வுகள் பதியப்பட்டுள்ளன. கூற்றின் இப்பகுதிகள் வரலாற்றின் சில பக்கங்களாக இருக்கலாம். ஆனால் பெண்களால், பெண்களுக்காக உருவாக்கப்பட்ட அமைப்பொன்று 25 வருடங்களையும் தாண்டி செயற்படுகிறது என்றால் 'பெண்ணின் பெருமை தான்' என்று கூறிவிடலாம்.

'பெண் நினைத்தால் செய்துவிடுவாள்' பெண்ணால் ஆகாதது ஒன்றுமில்லை என்ற வாசகங்களின் கருத்து நிலைமட்டுமல்ல, செயல் நிலையும் இங்கு எடுத்தியம்பப்பட்டுள்ளன. 'பெண்களின் வரலாறுகள்' நினைவுகளினூடாக பதிவுகளாக சித்திரலேகா மௌனகுரு அவர்களால் பகிரப்பட்டுள்ளமை செயல்வாதத்தின் உண்மைத் தன்மையை எடுத்தியம்புகின்றது. இலங்கையின் பெண்கள் இயக்கம் சமூக நீதிக்காக குரல்கொடுக்கும் குழுக்களுடன் இணைந்த வரலாறு. அத்துடன் மிகுந்த தன்னார்வமும் படைப்பாற்றலும் கொண்ட எதிர்ப்பு முறைமைகளை வெளிப்படுத்திய ஒரு கால கட்டத்தின் கதையாகவும் உள்ளது. 1970 - 1980 காலப்பகுதிகளில் 'ஒடுக்கு முறைக்கு எதிரான ஒரு புத்தெழுச்சியும் புதிய கோட்பாடுகளும் நிகழ்ந்த காலப்பகுதி எனச் சுட்டிக்காட்டியதுடன், 1977 - திறந்த பொருளாதாரக் கொள்கை 1978 - அதிகாரமுடைய ஜனாதிபதிமுறை, பயங்கரவாத தடைச்சட்டம் 1980 - தொழிற்சங்கங்களை அடக்கியமை, 1983 தமிழருக்கு எதிரான வன்முறை நாடளாவிய ரீதியாக உருவாகியமை என்ற பின்னணியையும் 1974 - யாழ்பாண பல்கலைக்கழக உருவாக்கம் 1975ல் ஐ.நாடுகள் சபை பெண்கள் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியமை என்ற பின்னணியில் யாழ்ப்பாணத்தில் நுஃமான், இந்திரபாலா, நித்தியானந்தன், சுஜரித்த கம்லர் உள்ளிட்ட பல்கலைக்கழகத்தினர் சமூக நீதிக்காகவும் முற்போக்கு மாற்றத்திற்காகவும் குரல் கொடுத்தனர்.

இச் செயற்பாட்டைத் தொடர்ந்து 1981ல் பெண்கள் ஆய்வுவட்டம் யாழ்ப்பாணத்தில் உருவானது. 1986ல் 'சக்தி பிறக்குது' என்ற அறிக்கையுடன் அது தன் வேரினை ஊன்றியது. இவ்வேரின் கிளைகளாக, பக்க வேர்களாக பல சம்பவங்கள், 1984ல் அன்னையர் முன்னணி 'சுலோகம் தாங்கி ஐந்நூறு பெண்கள் பேரணி' நடத்திய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கோஷம் இன்றுவரை ஒலித்துக் கொண்டிருப்பது தான் வேதனைக்குரியது. 'எம்பிள்ளைகள் எங்கே? பிள்ளைகளைத் திருப்பித்தா? விடுதலை செய்... காலம் கடந்தோடினாலும் காட்சிகளும் தமிழர் வரலாறுகளும் ஆறாத் தொடர்ச்சியாக நிலைத்து நிற்பது விதியா? சதியா?'

சூரியா பெண்கள் அமைப்பின் கலாசார செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளது.' கலைச் செயற்பாடுகளில் பங்கு பற்றிய பெண்கள் மத்தியில் மன எழுச்சியையும் உற்சாகத்தையும் தூண்டியிருந்தன. தங்களால் கலைப்படைப்புக்களை உருவாக்கி அறிக்கை செய்யும் ஆளுமையை அடையாளம் காணும் சூழல் அவர்களுக்கு ஏற்பட்டது.' என்ற கூற்று இங்கு கவனத்திற்குரியது. நாடகங்களின் எழுத்துப் பிரதிகள் தனியாக எழுதப்பட்டவை மட்டுமன்றி கூட்டான கலந்துரையாடல்கள், கருத்துப் பகிர்வுகள், கதை ஆக்கங்கள் என மலர்ந்த விதம் இங்கு புதுமையானது. குறிப்பாக 'மங்கையராய் பிறப்பதற்கு நிராகரிக்க முடியாதபடி, கனகம்மாவின் கதை, பேராசிரியர் மங்கை இந்தியாவைச் சேர்ந்தவர். அவரின் நெறியாள்கையின் கீழ் பாரமுறி விளையாட்டு, மட்டு நகர் கண்ணகை, நிசப்த இரைச்சல், பெண்களின் ஆற்றல்களைக் கொண்டாடுவோம் என்பவை கவனத்திற்குரியவை. நாடகங்கள் மட்டுமன்றி 'பாடல்கள், ஒலிநாடா, ஓவியக் கண்காட்சிகள் என கலைவடிவச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை சிறப்பானது. இவர்களின் ஆற்றுகை தொடர்பாக மங்கை அவர்களது' எந்தவித பகட்டும் இல்லாமல் தொடர்ந்து இருத்தலின் பொருளை கற்றுத் தருபவர்களாக பெண்களின் நிலை தொடர்பான அழுத்தமான கருத்து வெளிப்பாடாக அமைகிறது.

பெண்களின் மீது வெளிச்சம் படுவது குறைவு. அவர்கள் வெளிச்சத்துக்கு வருவதை இந்தச் சூழல் அவ்வளவாக விரும்புவதில்லை. வெளிச்சம் இல்லாத இருண்ட வாழ்வு வாழும் சகோதரிகள் சிந்திப்பதற்கான ஒரு பகிர்வாக/கலந்துரையாடலாக 'உலகத்து வெளிச்சம் என்னுள் வந்தது' என்ற இலங்கேஷ்வரி, கல்யாணி கலந்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாடல் அமைந்துள்ளது. பெண்களின் வாழ்நிலை வீட்டை விட்டு வெளியேறுதல், தாயை விட்டு பிரிதல், யுத்தநிலைமைகள், நகருக்கு வருதல், புதியவர்களைச் சந்தித்தல், சூரியாவுடனான கூட்டான செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடலின் பகிர்வானது வாழ்வில் விளிம்பில் வாழ்த்தலுக்கான நிபந்தனைகள் எதுவுமின்றி சிந்திக்க செயலற்று நிற்கும் சகோதரிகளுக்கு ஓர் ஊன்று கோலாக அமைகின்றது.

பெண்களின் சுமைகள் பரந்துபட்டவை. பல் வகிபாகங்களை பெண் வகிக்கின்ற போதும் அவர்களுக்கான மேம்பாடுகள் பற்றிய சிந்திப்பு மிகக் குறைவு. சூரியாவின் நூலகப் பகுதியானது பெண்ணின் மொழியாற்றல் விருத்தி, சிந்திப்பாற்றலில் விரி சிந்தனைக்கு உறுதுணையாக அமைகின்றது. இவ்வாறு சிந்தித்ததன் வெளிப்பாடுகள் பெண்களின் முறைசாரா பொருளாதார பங்களிப்பில் 'பராமரிப்பு பொருளாதாரம்' என்ற எண்ணக் கருவாகும். பெண்ணின் பெறுமதியை மூடர் அறிவாரோ! எச்சுமைகளையும் 'குடும்பம்' என்ற வட்டத்திற்குள் சுற்றித்திரியும் விட்டில் பூச்சியாய் அனுபவிக்கும், பெண்ணின் நிலையை ஒவ்வொரு தனிமனிதனும் சிந்திப்பதற்கு வழிகாட்டுகின்றது.

'எனது மனைவி வேலைக்குச் செல்வதில்லை' என்ற அம்ருதா பிரீதமின் கவிதை இவ்வாறு பேசுகிறது.

......அப்படியாயின் உலகம் ஓயாமல் சுழல்வதற்காய் உழைப்பவர் யார், சமையல் செய்வது துணிகள் தோய்ப்பது தண்ணீர் சுமப்பது யார், குழந்தைகள் பராமரிப்பது, நோயாளர்களை கவனிப்பது யார்....

எவரது உழைப்பு கண்ணில் படாதது
எவரது உழைப்பு காதில் விழாதது...
எவரது உழைப்பு கணிக்கப்படாதது.....

'கூற்று' தன் சமாதானச் செய்தியை 'சமாதானம் என்பது அனைத்து தரப்புக்களையும் அடக்கிய அரசியல் செயல்முறை. யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், நீதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விடயங்களை முன்னெடுக்கும் ஒரு முயற்சி' என்பதாகக் கருதப்படுகின்றது.

பெண்கள் பலமான வலையமைப்பொன்றை உருவாக்கி அரசோடும், சர்வதேச நிறுவனங்களோடும் இணைந்து நமது சூழலில் மாற்றத்தைக் கொண்டு வருவதோடு இலங்கைப் பெண்களின் சமத்துவம் மற்றும் உரிமைக்கான உத்தரவாதங்களை வென்றெடுக்க முடியும் என்ற சுனிலா அபயசேகர அவர்களது கூற்று பெண்களின் பலத்தைச் சூரியாவின் பலமான கரங்களை, சமாதானம் நோக்கி பயணிக்க உதவும் தகுதியை எடுத்தியம்புகிறது. 'எங்களால் முடியாதது எதுவுமில்லை' என்பதை வலியுறுத்துகிறது.

'கூற்று' தூக்கிய எறியப்பட முடியாத கேள்வியாக அன்றி செயலாக பிரசன்னமாகி உள்ளது. பெண்களின் கூட்டிணைவு நிறுவனமயப்படுத்தப்பட வேண்டியதும், ஆவணப்படுத்தப்பட வேண்டியதும் பெண்ணின் வரலாற்றுக் கடமையாகும். இதன் செயலொழுங்கு அனுபவங்கள் இங்கு பகிரப்பட்டுள்ளன. சூரியாவின் 25 வருட அனுபவங்கள் பெண்களின் பலமான பயணிப்பின் சின்னம்.


உள்ளூர்களில் இயங்கும் பெண்கள் அமைப்புக்கள் தனித்துவமும், தன்நிலை பெறவும் 'கூற்று' வழிகாட்டியுள்ளது. ஆவணங்கள் வரலாறுகள் ஆகின்றன. ஆகவே பெண்கள் வலையமைப்புக்கள் தமது செயற்பாடுகளை விரிவாக்கம் செய்யப்படுவதன் அவசியம் இங்கு உணர்த்தப்பட்டுள்ளது.

'இந்நூல் ஒவ்வொரு பெண்ணாலும் வாசிக்கப்பட வேண்டியது. எல்லா பெண்கள் அமைப்புக்களாலும் புரிந்து கொள்ளப்பட்டு செயலொழுங்கு பெறப்பட்டு மாற்றங்கள் நிகழ்த்தப்பட வேண்டும். கூற்றுக்கள் தொடரட்டும்......'

**திருமிகு. பத்மாவதி ஜெயச்சந்திரன்**
விரிவுரையாளர், வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணில் பெருந்தக்க யாதுள...

**சி**த்திரத்தில் பெண்ணெழுதி
சீர்ப்படுத்தும் மானுடனே
ஜீவனுள்ள பெண்ணினத்தை
வாழவிட மாட்டாயோ?"

இந்தப்பாடலில்
"அன்னையென்றும்
தங்கையென்றும் ஆர்பரிக்கும்
பெரியோரே இன்னமுதத்
தெய்வமெலாம் ஏட்டில் இருக்கும் வரைதானோ,"

சிவனில்லையேல் சக்தி இல்லை. அதே சமயம் சக்தி இல்லையேல் சிவனில்லை என்று கூறியதோடு மாதொரு பாகனால் இடப் பக்கத்தில் சக்தியுடன் காட்சி தருவது முழு முதற் கடவுளாக வழிபடும் அர்த்த நாரீசுவரர் காட்சி. சக்திதனைப் போற்ற வேண்டும். பெண் சக்தி போன்றவள் எல்லா இயக்கத்துக்கும் காரணமானவள். மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமென்றோ கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை. பொதுவாக கவிஞர்கள் எழுத்தில் பேச்சில் பெண்ணைப் போற்றுகிறார்கள் ஆனால் நடைமுறையில்...?

"அம்மா செத்த
அடுத்த வருடம்
எனக்கொரு தம்பி"

என்று எழுதப்பட்டுள்ளது ஒரு ஹைக்கூ கவிதை.

'சமைப்பது
துணி துவைப்பது
வீட்டைச் சுத்தப்படுத்துவது
பிள்ளைகளைப் பராமரிப்பது
இன்முகத்துடன் இருப்பது
இன்பம் அளிப்பது
நல்ல பெண்ணுக்கு அடையாளம்
இல்லையேல்
நீலி
அடங்காப்பிடாரி
ஆண் வேஷம் பூண்ட பெண்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பெண்ணின் நிலை தொடர்பாக ஒரு புதுக் கவிதை எழுதப்பட்டுள்ளது. எழுதி என்ன...?

இடர்கள் சூழ்ந்ததாய், செல்லும் வழி இருட்டாய் காணப்படுகிறது எங்களின் வாழ்க்கை என்று குமுறுகிறார்கள் பெண்கள். சக்தி என்பதும் சிவம் என்பதும் தத்துவங்கள். தத்துவங்கள் சரி நடைமுறைதான் ஒத்துவரவில்லை.

**"ஓசைகள்**
**ஒரு செருப்பொலியில்**
**உறிஞ்சப்பட்ட**
**மௌனப் பந்தாய்**
**கட்டிலுக்கடியில்**
**ஒளிந்து கொள்கிறது**
**மகிழ்ச்சி."**

என்ற புதுக்கவிதையில் பெண்ணின் இருப்பு. இன்றைய வாழ்க்கை நிலையில் அவள் படுகின்ற துன்பங்களைத் துல்லியமாகக் காட்டுகின்றது.

**"சீதைக்குக் கோடு**
**நளாயினிக்குக் கூடை**
**கண்ணகிக்குப் பத்தினிப்பட்டம்**
**அருந்ததிக்கு வானம்**
**புராணம் படி! புரிந்து கொள்!**
**நீ அகாலத்தில் இறந்தால்**
**புன்னகை உறைந்த**
**உன் புகைப்படத்துக்கு**
**மாலை போட**
**மூன்றே மாதங்களில் மற்றொருத்தி."**

இந்த இழிநிலைதான் பெண்ணுக்கு வழங்கப்பட்ட சம உரிமையா? சரி நிகர் சமானமாக வாழவும் இந்த நாட்டிலே என்று பாரதி பாடி வைத்தான். பாரதி எமக்குத் தந்தை. பாரதியின் பாதையில் பயணம் செய்வோம். பாரதி எங்கள் வாழ்க்கையின் திசைகாட்டி என்றெல்லாம் வெறும் வாய்ப் பேச்சில் சொல்லிக்கொண்டு பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் வாழ விடுவதில்லை என்ற கவலை பெண்களுக்குண்டு.

**"கோடு போட்டு நிற்கச் சொன்னால்**
**சீதை அங்கு இல்லையே**
**சீதை அன்று நின்றிருந்தால்**
**இராமன் கதை இல்லையே"**

என்று கண்ணதாசன் பாடியுள்ளார். இராமாயணத்தை சுருக்கிக் கவி வடிவாய்ச் சொன்னது சிறப்புத்தான். அதே வேளை கோடு போடுவதும் கொள்கை வகுப்பதும் ஆண்களா? பெண்ணுக்கென்று கோலங்கள் இல்லையா? பெண் திட்டமிடுவதும் தீர்மானம் எடுப்பதும் அதை நடைமுறைப்படுத்தி வெற்றி காண்பதும் நடைமுறைச் சாத்தியமில்லையா?

எவ்வளவுதான் படித்திருந்தாலும் படிப்புக்கேற்ற உயர் பதவியில் இருந்தாலும் சீதனம் என்னும் பறப்பேயை விரட்ட முடியாமல் தவிக்கிறார்கள் பெண்கள். தாய்மார்களிலும் சகோதரிகளிலும் குற்றம் சாட்டி தப்பும் ஆண்கள் தங்களது தப்பை உணர்வதில்லை.

**"மனைவி அமைவதெல்லாம்**
**இறைவன் கொடுத்த வரம்**
**கணவன் அமைவதெல்லாம்**
**மனைவி கொடுத்த பணம்"**

என்று சாட்டையடி கொடுத்த போதும்

**"திருமணங்கள்**
**சொர்க்கத்தில்**
**நிச்சயிக்கப்படுவதில்லை**
**ரொக்கத்தில் நிர்ணயிக்கப்படுகின்றன"**

என்று சாடிய போதும் அது எருமை மாட்டு மழையாக, செவிடன் காதில் ஊதிய சங்கொலியாக வீணாய்ப் போகின்றது.

எங்கள் வீட்டிலொரு பொம்மை என்ற கவிதை கவிஞர் ஆகர்க்ஷியாவால் எழுதப்பட்டது. அது பின்வருமாறு.

**"விளையாட வரவில்லை**
**என்றது பொம்மை**
**கையில் எப்போதும்**
**பிடித்திருக்கும் கரண்டி**
**முடுக்கி விட்ட பொம்மை**
**நடந்து செல்லும்**
**குழந்தை சுமக்கும்**
**உடுப்புத் தோய்க்கும்**
**சமைக்கும்**
**மூட்டைகள் தூக்கும்**
**அவ்வப்போது**
**பளாரென்று அடியும் வாங்கும்**
**எங்கள் வீட்டிலொரு பொம்மை**
**அதற்கு விளையாட தெரியாது**
**தலையை மட்டும் ஆட்டும்**
**ஆம், ஆம், சரி, சரி என்பது போல....**
**நிற்காது சிரிக்காது**
**யாருடனும் கதைக்காது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்கு மட்டும்
வெளியில் போகும்
நேற்றுக் காலை
கடைவீதியிலும் கண்டேன்
ஏராளமான பொம்மைகள்
விதம் விதமாய்
நிறம் நிறமாய்
கண்களுக்குள் புதைந்து போன
கனவுகளுடன்...."

பெண் என்ன முடுக்கிவிட்ட பொம்மையா? குடும்ப மூட்டை சுமக்கும் சுமை தாங்கியா? பிள்ளை பெறும் இயந்திரமா? இவ்வாறான வினாக்கள் எல்லாம் விடைகளில்லா நிலையிலா தொடர்ந்தும் இருக்க வேண்டும்.? விடை யாரிடம் இருக்கிறது?

"ஆதிபராசக்தி
அன்னை வேளாங்கண்ணி
அன்ன பூரணி
இன்னும் என்னென்னவோ பெயர்கள்
தெய்வங்களின் பெயர்களெல்லாம்
தேனொழுக சூட்டுவர்
ஆனால்
சக மனிசியாக
ஒரு போதும் நடத்தவில்லை."

பெண்ணியம் காக்க, பெண் விடுதலை வேண்டிய பல கவிதைகளை எழுதிக் குவித்தாலும் யதார்த்தத்தில் இது இன்னும் சாத்தியமில்லை. திருமணம் என்ற பெயரில் பெண் சுரண்டப் படுகிறாள். ஞானக்குமார் என்ற கவிஞன் பின்வரு மாறு எழுதியுள்ளார்.

"எங்களூரின் கோயிலில்
வள்ளிக்கு
வருடாவருடம் திருமணம்
என் வீட்டின் முன் இருக்கும்
வள்ளிக்கோ
ஐம்பதாகியும்
இன்னமும் திருமணம்
நடைபெறவில்லை."

இருமனம் சேர்ந்து இணையில்லா இன்பம் பெற்று இனிய உறவாக இல்லறமென்னும் நல்லுறவு பேண எத்தனை சோதனைகள் பெண்ணுக்கு. பொருளாதாரம் தேட புதியதொரு வழியாகத் திருமணம் எனும் வியாபாரம் தொடர்கிறது. தாரம் பொருளோடு சேர்ந்து பொருள் ஆதாரம் ஆகிறது. பெண் திருமண பந்தத்தின் மூலமே வீடுபேறு அடைவதாக பலரும் எண்ணுகிறார்கள். பெண் தனித்து வாழ முடியாது என்கின்ற நிலை, குறிப்பாக பாதுகாப்பின்மை என்ற பிரச்சனை பெண்ணுக்கு அதிகம்.

"நாங்கள் பாபர் மசூதிதான்
எங்களை இழப்பதற்கு எல்லோரும் தயார்
ஆனால்
கட்டுவதற்கு ஒரு பயல் கூட இல்லை?!

பெண்ணியல்வாதிகள் குமுறுவது நியாயமே. அண்மைக்கால சம்பவங்கள் இதற்கு ஆதாரங்கள் ஆகின்றன.

"ஆண்
ஆதாரம் தேவை
இல்லையெனில்
பெண்
சேதாரம் ஆகும்
சீர்கெட்ட சமூகம்
சிதைந்திட வேண்டும்"

'தனி மனிதனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்து விடு' என்று பாரதி குமுறியது போல் இன்று பெண்களும் குமுற வேண்டும். காதலனுடன் சென்ற மருத்துவ பீட மாணவி களங்கப்படுத்தப்பட்டு கொலை செய்யப் பட்ட சம்பவத்தை உலகமே அறியும். வித்தியா என்ற பாடசாலை மாணவி கூட்டு வன்புணர்வுக் குள்ளாக்கப்பட்டு கோரமாகக் கொலை செய்யப் பட்டதை உலகறியும்.

"பூப் பறிக்க
கோடரி எதற்கு?"

என்றொரு சினிமாப்பாடல். ஆனால் பூவாக எத்தனை பேர் உணர்கிறார்கள். ஏமாற்றுவதே தொழிலாகக் கொண்ட ஆண்கள். பாவம் பெண்கள் திருமணம் செய்வார்கள். பின்னர் குடி, போதை. வீண் செலவு எனத் தனக்காக மட்டும் வாழ முற்படும் போது மனைவி பிரச்சனைக்குரிய வளாகிறாள். பிரிந்து வாழ்வதே நிம்மதி என்ற நிலையில் பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்ற நிலை. ஆண் மீண்டும் இன்னொரு திருமண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை. இலக்கியத்தில் தான் சொல்லப்பட்டிருக்கிறதே. அவன் பரந்தாமன் சேறு கண்ட இடத்தில் மிதித்து தண்ணி கண்ட இடத்தில் விழுவான். அவள் பெண் கெட்டால் சரித்திரம், ஆண் கெட்டால் சம்பவம் என்று நியாயப்படுத்தப் பட்டுள்ளதே.

**"அந்த வண்டின்**
**முகத்தில் தான்**
**எத்தனை மலர்களின்**
**முகவரிகள்."**

என்றொரு கவிஞர் கூறுகிறார். மலர் விட்டு மலர் தாவும் ஆணாதிக்க சமூகம் இதனை உணர்வதாயில்லை. இன்று போதை வஸ்து பாவனை, குடும்பத்தை சீரழிக்கும் மது.... எல்லாம் ஆண்களால் ஏற்படுத்தப்பட்டது தானே.

**"மலர் விட்டு மலர் தாவுவதால்**
**மலர் நொறுங்கிப் போவதில்லை**
**ஆனால்**
**நொந்து போகிறது.."**

இது வெறும் கவிதை வரிகளில்லை. ஆண்களின் நெஞ்சைத் தொட வேண்டும். இரு கை தட்டினால் ஓசை இல்லையேல்.... இனியாவது உணருங்கள்.

**திருமிகு. பா. கலா**
வவுனியா

# அச்சமின்றிய பொழுதுகள்

**ஜெ.பன்னிலா / சர்மா**

தனித்து விடப்பட்டவர்களாய் - நாம்
நடந்து வந்த பொழுதுகள்
காலடியில் எம் காணித்துண்டுகள்
மூழ்கியது - எம் கண்ணீரிலே....

வலித்தது கால்களை விட
எங்கள் எதிர்காலம்தான்
அங்கே இருந்தது சொத்தாய்
எங்கள் பிச்சையல்வா...?
பிச்சை என்றாலும் - அது எம்
சொத்தல்லவா...?

அங்கே
ஓய்வெடுக்க மரங்களுண்டு
அதன் கீழ்
உட்கார உரிமையுண்டு.
ஏன்..?
சத்தம் போடக் கூட - அங்கே
சுதந்திர வெளியுண்டு
அவை
அச்சமின்றி - நாங்கள்
வாழ்ந்த - பொழுதுகள் - அங்கே
அழிந்தே கிடக்கின்றது



அத்தனையும் கடந்துவந்தோம்
அதையெல்லாம் துறந்து வந்தோம்
காலனைக் கண்டே வழியெல்லாம்
பயந்து வந்தோம்.
இங்கு தலையில் தட்டும் கூடாரத்தினுள்
தலை குனிந்தே நடக்கின்றோம்.


இதுவே - எங்கள்
வாழ்வாகிப் போனதால்
கூடவே வந்த குடும்ப வன்முறை
கால் நீட்டிப் படுக்கிறது
எங்கள் கூடாரத்தில்

நாங்கள் வாழ்ந்த பொழுதுகளோ - அங்கே
அழிந்தே கிடக்கிறது.

கரங்கள் - எங்கள்
கை நழுவிச் சென்றதனால்
காற்றுக் குழாய்களை - இங்கு
கைகள் எனச் சொல்கிறோம்.

வெறும் கையால் விதைக்கின்றோம்
விடியலின்றி நடக்கின்றோம்
எம்மை கை கழுவ
நிலை குலைந்து நிற்கிறோம் - மீண்டும்
நிலைநிறுத்த முயல்கின்றோம்
தன்னாற்றல் கொண்டு பெண்கள்
தழைத்திட துணிகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுனிலா அபயசேகரவின்

## வாழ்வு, பாடல், காதல், அரசியல்

2019 மார்ச் 08 அன்று சூரியாவின் சர்வதேச பெண்கள் தின நிகழ்வு "மனச்சோலை"க் காணியில் இடம் பெற்றது. இதன்போது சுனிலா அபயசேகரவின் உருவப்படம் அங்கு திறந்து வைக்கப்பட்டதுடன் சரளா இமனுவெல் அவர்கள், அன்பு, அரசியல், பெண்கள், பாடல் என நிறைந்த சுனிலாவின் வாழ்வையும் அவருடன் தான் வாழ்ந்த நினைவுகளையும் பகிர்ந்து கொண்டார்.

நாங்கள் இன்று "சர்வதேச பெண்கள் தினம்" கொண்டாடுகின்றோம். நாம் அனைவரும் பெண்கள் உரிமை சம்பந்தமாக வேலை செய்யும் போது எமது வேலைகளில், நடனம், பாடல், ஆக்கங்கள் என்பன ஒரு முக்கிய பகுதியாக உள்ளன.

இன்று இத் தினத்தில் நான் சுனிலாவின் வாழ்வு பற்றி பேசுகையில் அவரது வாழ்வில் பாடல் எவ்வாறு ஒரு பகுதியாக இருந்துள்ளது என்பதை முதலில் பார்க்கலாம்

1980ம் ஆண்டு சுனிலாவின் அரசியல் தொடர்பான வேலைகளுக்கூடாக சுனிலா விற்கும் எனது அம்மா ஸ்ரீறியானிக்குமான தொடர்பு ஏற்பட்டது.

அப்போதுதான் நான் சுனிலைவைச் சந்தித்தேன். இருவரும் பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பில் அரசியல் தொடர்பான வேலைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அம்மா என்னை தினசரி அவர் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்வார். இதனால் அங்குதான் நானும் வளர்ந்தேன். அவர்கள் கூட்டம், ஆர்ப்பாட்டம் என்று செல்லும்போது என்னையும் கொண்டு செல்வார்கள். அன்றிலிருந்தே சுனிலாவும் எனக்கொரு அம்மா ஆனார்.

அந்த நேரத்தில் இலங்கையில் பெண்கள் இணைந்து நடத்திய முக்கிய ஆறு போராட்டங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தன. அப் போராட்டமானது பெண்களின் காணி உரிமைகள், விவசாயம், தண்ணி வரி கட்டுதல் தொடர்பானதாக இருந்தது. எனது அம்மாவும் சுனிலாவும் அப் போராட்டத்தில் முழுமையாக பங்கெடுத்ததுடன் சுனிலா இப்பெண்களின் போராட்டத்தினை எழுத்தில் கொண்டு வந்தார்.

அவர்களைச் (சுனிலா, ஸ்ரீயானியைச்) சுற்றிய எனது ஞாபகங்கள் அவர்கள் வேலைகள் தொடர்பாக இருப்பதைவிட அவர்கள் அன்பு, பெண்களிடையே அவர்கள் கொண்டிருந்த உறவுகள் பற்றியே அதிகம் உள்ளது. எனது பார்வையில் பெண்கள் மீது சுனிலா கொண்டிருந்த அன்பே அவரது அரசியல்

இங்கு பெண்கள் போராட்டம் பற்றி சுனிலா எழுதிப் பாடிய ஒரு சிங்கள பாடலைக் குறிப்பிட விரும்புகிறேன். இப் பாடல் எனது அம்மா ஸ்ரீயானி தயாரித்த "இரு உலகம் ஒரு வாழ்வு"(two worlds one life) படத்தில் வந்துள்ளது.


யுகங்களாய்
யுகம் யுகமாய் பெருகிய கண்ணீரும்
பெருமூச்சும்
இருளடைந்த மனதைக் கழுவிச்
சுத்தம் செய்தன.

குளிர்ந்த இரவு ஒரு கனவைக்
கொண்டு வந்தது
அக் கனவு – அவளை
விடுதலை செய்தது
அடிமைத் தளைகளைத் தகர்த்தது

மனைவியாய்த், தாயாய்த்
தோழியாய்
தினம் தினம் அவள் உழைத்து
களைக்கிறாள் - உலகிற்காக

ஆனால், வாழ்க்கை
அவளுக்குச் சொந்தமாகவில்லை
ஒன்றுபட்டு, அச்சமின்றி
மண்டியிடாமல்

சோதர சோதரிகள்
நம் வலிமையில் இணைவோம்



நமது உடல்களை
ஆன்மாக்களை
பிணைத்துள்ள சங்கிலிகளை உடைத்து
மகிழ்வைத் தேடுவோம்

கதிரவன் உதிக்கும்
வைகறைப் பொழுதிலே
கட்டுகளற்ற புது உலகம்
மலர்ந்திடும்

கரைகளைத் தாண்டி பரவும்
நம் கனவுகள் விடியலை
நோக்கிய எமது
பயணத்தை வலுவூட்டும்
பாடல் - சுனிலா
மொழிபெயர்ப்பு பொன்னி அரசு, அ.மங்கை

இந்த பாட்டின் கடைசி வரிதான் இந்தப் படத்திலும் உள்ளது அவர் வாழ்ந்த அன்றைய காலப்பகுதி கூடுதலாக போராட்டம் நிறைந்த காலப் பகுதியாகும். அப்போது மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள் சம்பந்தமாக வேலை செய்தவர்களுக்கூட எதிர்ப்பும் அச்சுறுத்தலும் இருந்தது. சுனிலா போர்க் காலச் சூழல் தொடர்பாக மட்டும் பாடல்கள் பாட வில்லை. அன்பு தொடர்பாக பாடல்கள் பாடியுள்ளார். 1984ம் ஆண்டு "கால அலைகள்" (காலையே ராவிய) எனும் ஒரு பெரியதொரு அரசியல் நிகழ்ச்சி யில் சுனிலா பாடல் பாடியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பாடல் எனக்கு மிகவும் விருப்பமான சுனிலா பாடிய ஒரு தாலாட்டுப் பாடல். சின்ன வயதில் இப் பாடலை எனக்காகவும் சுனிலா பாடினார். இப்பாடலில் வருவது வறுமை, தோட்டத் தொழிலாளிகள் வாழ்வு, பெண்கள் பிரச்சனை போன்ற விடயங்கள் ஆகும். எனினும் இப் பாடலுக்கான பதிவு(recording) எங்கும் இல்லை. இதன் மெட்டு என் ஞாபகத்தில் உள்ளது.

சூரிய நிலவொளிக் குழந்தை
செல்லமே என் மகவே
இது உனக்காகக் கட்டப்பட்ட கூரை
சூரிய நிலவொளியிலான கூரை
எதற்கென அறியாது
இப் பெரிய உலகில் ஏன் பிறந்தாய் செல்லமே

அமைதியான கடல்
களைப்புடன் புரட்சிகரப்
பாடல்களை இசைக்கிறது.

புண்பட்ட மனதுடன்
ஊறும் பால் காய்ந்துபோக
தாய்மார்கள் அழுகின்றனர்

லயம் வீடுகளில் நெஞ்சு
கொதிக்கும் மெழுகாய் எரிகிறது..
உன் தூளியில் எப்படி
பூவிதழ்கள் இருக்கும்?
என் பொன் மகவே

தேயிலைக் காட்டில்
பனி தோய்ந்த பாயில்
நீ அடி மேல் அடி எடுத்து வைக்கின்றாய்

ஆசையாக இருந்தாலும் - நீ
பள்ளிக்குப் போகும் வாய்ப்பில்லை
தேயிலை கொய்வதும்
கல் உடைப்பதும்
முடித்து வர இரவாகிடும்

இப் பெரிய பூமியில்
காளானுக்குக் கூட இடமுண்டு
ஆனால்
உனக்கொரு இடமில்லை
என் செல்லமே
பாடல் இயற்றியவர்- ரத்னஸ்ரீ விஜெசிங்க
மொழிபெயர்ப்பு அ.மங்கை

சுனிலா பற்றிய மற்றுமொரு முக்கியமான விடயம் இலங்கையில் நடந்த யுத்தம், மனித உரிமை மீறல்கள், அநீதி, பெண்கள் உரிமை மீறல்கள், சம்பந்தமாக இறுதி வரை மிகவும் உறுதியாகக் குரல் கொடுத்து செயற்பட்டவர் சுனிலா. ஜனநாயகம், முஸ்லிம் தமிழ் சமூகங்களிற்கு இந்த நாட்டில் உள்ள பிரச்சனை தொடர்பாக தொடர்ந்து கதைத்து வந்தவர். இவரது இவ் வாழ்வு பற்றி பேராசிரியை சித்திரலேகா எழுதியுள்ளார்.

சுனிலாவின் தினசரி வாழ்வின் ஒவ்வொரு அங்கத்திலும் அவரது அரசியல் காணப்படும். சுனிலாவிற்கு பல நண்பிகள் உள்ளனர். மட்டக்களப்பிற்கு அடிக்கடி வருவார். யுத்தம் மிகவும் கொடூரமாக நடந்து கொண்டிருந்த காலப்பகுதியிலும் வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட பல பகுதிகளுக்கு வந்து அங்குள்ள பெண்களைச் சந்தித்து அவர்கள் எதிர் கொண்ட வன்முறை தொடர்பாக உரையாடி அப் பெண்களுடன் நெருக்கமாக மிகவும் அன்பாக இருந்து வேலை செய்தார்.

இலங்கையில் ஏற்பட்ட யுத்தத்திற்கு அடிப்படைக் காரணம் இங்கு வாழும் மக்களிடையே, பெண்களிடையே சம மதிப்பு, சம உரிமை இல்லாததே ஆகும். இதனை அவர் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு இடத்திலும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சுனிலா "சமாதானம்" என்பதை பெண்ணிய நோக்கில்தான் பார்த்தார்.

2008ம் ஆண்டு மனித உரிமை கண்காணிப்பு அமைப்பால் (Human rights watch) அவருக்கு ஐக்கிய நாடுகள் சபையால் "மனித உரிமைகள் ஆர்வலர்" என்பதற்கான விருது கிடைத்தது.

1998ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் "மனித உரிமைப் பாதுகாப்பாளர் விருது" சுனிலாவிற்கு கிடைத்தது.

இவ்வாறான விருதுகளை அனைத்து நண்பிகளும் அவருடன் வேலை செய்த மருத்துவர்கள் (doctors), சட்டத்தரணிகள், ஊர்ப் பெண்கள், அனைவரும் கொண்டாடியதுடன் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையமும் கொண்டாடியது.

சுனிலா எனக்கு சொன்னது இதைத்தான். அதாவது தனது வாழ்க்கையில் பெண்கள் அனைவரும் இணைந்து கொண்டாடுவதுதான் தனக்கு முக்கியம் என்று.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் ஆரம்ப ஸ்தாபகராக இருந்ததுடன் சூரியாவின் ஆலோசனைக் குழு உறுப்பினராக இருந்து ஆலோசனைகள் வழங்கி வந்தார். இவரது முக்கிய கனவு பெண்களுக்கென்று சுதந்திரமான தனித்த "வெளி" ஒன்று இருத்தல். அதன் நனவே மயிலம்பாவெளியில் உள்ள இந்த மனச்சோலைக் காணி. இதற்காக நிதி உதவி புரிந்து ஊக்கமளித்தவர் சுனிலா.

சுனிலாவின் மகளான நான் அவரிடம் இருந்து படித்த பாடம் "நமது பயணங்கள் எல்லாம் முடிவு தெரிந்து தொடர்ந்து போகும் பயணங்கள் அல்ல. அது முடிவு தெரியாமல் போகும் பயணங்கள். பயணம்தான் முக்கியம். அந்த பயணத்தில் அன்போடு முழு மனதோடு போவதுதான் முக்கியம்."

சுனிலா என்னுள் தந்தது புரட்சி, அன்பு, பாடல், வேலையின் முடிவு தெரியாது எப்படி வேலை செய்வது எனும் கற்கை. இவை எல்லாம் அவரது வாழ்வில் இருந்து நான் கற்ற பாடங்கள். அடுத்து நான் தர விரும்புவது சர்வதேச பெண்கள் தினத்தன்று பெண்கள் உரிமை தொடர்பாக வழமையாக பாடப்படும் பெண்கள் பாடல்

நாங்கள் அணி வகுத்து நடந்தோம்....
கதிரவன் ஒளி எம்மை சுற்றி அழகாய் பரவ
அணிவகுத்து நடந்தோம்.
இருண்ட குசினிகளும்...
வெறிச்சோடிய தொழிற்சாலைகளும் திடீரென
படர்ந்த சூரிய ஒளியில் மூழ்கிட...
எங்கள் பாடல் அனைவரின் செவி சென்றடைய...
எமக்குத் தேவை
பாணும் ரோசாவும்,
உணவும் அன்பும் என பாடினோம்.

அணிவகுத்து நாங்கள் நடக்க
நாம் இழந்த கணக்கற்ற சகோதரிகளும்
அழுத வண்ணம் எம்முடன் சேர்ந்தனர்.
எமது பழம் பெரும் பாடலான
உணவும் அன்பும் கோரும் பாடலை பாடினர்.
அப் பாடல் சிறு கலையாக்கமும், காதலும், அழகும்
கேட்ட பாடலுமாகும்.
அவரது ஆன்மாவிற்குத் தெரியும்,
ஓம், நாங்கள் உணவுக்குப் போராடுகின்றோம்...
ஆனால் அன்பிற்கும்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புடவை உரசும் காலங்கள்



எப்போதாவது மிக இறுக்கமான
நடு நிசிகளில்
மனக் கண்கள் இரவுநேர மினுங்கும்
நட்சத்திரமாய்
விழித்து கதைபேசும்.

நினைவுத் தட்டில் விழும் ஞாபக
சில்லறைகளை
சேமித்து சில நேரம் ஒரு
பிச்சைக்காரனைப் போல
ஆறுதலாக எண்ணுகின்றது.

அந்தோ அந்தக் காலங்கள்
இன்னும் மறக்க துணிவில்லை.
ஓயாத கடிகாரமாய்
சுழன்று கொண்டிருக்கிறது.

சேலை கட்டி புது டீச்சர் விளையாட்டு
எனக்கு ரொம்ப பிடிக்கும்
பக்கத்து வீட்டுப் பிள்ளையும்
இந்த விளையாட்டுத்தான்
விளையாடுவாள்.

அவள் கட்டி விளையாடும் சிங்கபூர்
சேலைகள் இன்னும் என்
கறுப்பு கனவுகளில்
வானவில்லாகத்
தொங்கிக் கொண்டிருக்கிறது.

விதவிதமான சேலைகளுடன்
விளையாட்டை களிப்பாக்குவாள்

எப்போதும் அவளைக் கதவோரம் நின்று
பெருமிதத்தோடும் ஏமாற்றங்களோடும்
இரசிப்பேன்.

எனக்கும் ஆசைதான்
விதவிதமான சேலைகளுடன்
புதுடீச்சராய் வர?
ஆனால் ஆனால்

அம்மா நாணறிந்த நாள் மட்டும் இரண்டே
இரண்டு புடவை வைத்திருந்தாள்
அவளின் கொழுந்து கூடைகளின் சுமைகள்
இன்னும் நினைவுகளை அழுத்தும்.

உலகத்துக்கு என்னைத் தந்த உலகமே
நானென்றவள்
ஒவ்வொரு கண் விழிப்பின்
புகையுடனும் எரியாத
அடுப்புடனும் போராடுவாள்
தேயிலை சந்தையில்
இரத்தத்தை அட்டைக்கும்
வர்க்கங்களுக்குமே விற்றவள்.

எனக்கு முகவரி செதுக்க
உளிகளின் வலிகளை
சகித்தவள்.
அவளின் ஆத்மானந்த தியாகம்
உயிரோடு மயிர் பிடுங்கும்
வலிகள்தான்.

காலம் அம்மாவுக்கு
புடவை ஐந்நூறைத்
கொடுத்தாலும்
அவள் புடவை அற்ற அந்த
இருண்ட காலங்களை
நினைக்கும் போதேல்லாம்
உரசுகின்ற சேலைகள்
பொசுக்கென்று என்னைச் சுடும்

நான் வாங்கும் புடவைகள்
என்னை உரசி
புடவையற்ற அம்மாவை பற்றியே
பேசிக் கொண்டிருக்கிறது

**எஸ்தர்.** (மலையகம்)
திருகோணமலையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியலில் பெண்கள்

**பெ**ண்கள் விடுதலை பற்றிய கோரிக்கைகள் பல்வேறு நிலைகளிலும் தளங்களிலும் வற்புறுத்தப்படுகின்றன. பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள் பற்றியும் அவற்றிலிருந்து விடுதலை பெறுவது என்பதும் பேசாப் பொருளாகவே இருந்து வருகின்றது. இருந்தாலும் கூட இன்று ஓரளவுக்குத் தானும் சமூகத்தின் சில மட்டங்களிலே பெண் விடுதலை பற்றிய குரல்கள் ஒலிக்கவே செய்கின்றன. இன்று உலக மயமாதல் என்பதன் ஊடாக ஏகாதிபத்தியம் மூன்றாம் உலக நாடுகளை மென்மேலும் சுரண்டிக் கொள்ளையிட்டு வருகின்றது. இதில் பெண்கள் பன்முகப்பட்ட வழியில் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். குறிப்பாக இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுத் தளங்கள் அனைத்திலும் பெண் ஒடுக்குமுறைகளை அடையாளம் காண முடிகின்றது. இவ்வாறான நிலையில் இலங்கை அரசியலில் பெண்களின் நிலைப்பாடு பற்றி நோக்குகின்றபோது,

இலங்கை அரசியலில் ஆரம்பகாலம் தொட்டே பெண்களின் பங்களிப்பு இருந்து வந்திருக்கின்றது. வரலாற்றின் அடிப்படையில் இலங்கையை ஆட்சிபுரிந்த முதலாவது பெண்மணியாக குவேனி சொல்லப்படுகிறாள். இருந்தும் அதன் பின்னர் நீண்ட காலம் வரைக்கும் அதாவது சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக பதவி வகித்த காலத்திற்கு முன் எந்தப் பெண்ணும் அரசியலில் ஈடுபட்டதாகவோ அல்லது ஆட்சி செய்ததாகவோ தடயங்களை காண்பது அரிது. இருப்பினும் உலகிலேயே முதன்முதலாக பெண் ஒருவர் பிரதமராக தெரிவுசெய்யப்பட்ட பெருமை எமது நாட்டையே சாரும். 1960களில் பண்டாரநாயக்காவின் இறப்பினைத் தொடர்ந்து அவரது

**பெண்களே!**
**ஆட்சியில் அரசியலில் நாட்டின் நன்மைக்காக பெண்களின் சுதந்திரத்திற்காக அரசியலில் கால்தடத்தை ஊன்றிக் கொள்ளுங்கள்.**





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மனைவியாகிய சிறிமாவோ பிரதமராக பதவி யேற்றார். இப்போது நடைமுறையிலிருக்கும் 19வது திருத்தத்தின் பிரகாரம் அப்போதும் ஜனாதி பதியை விட பிரதமருக்கே அதிகாரம் அதிகமாக இருந்தது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

1970, 1980 களில் பெண் உரிமைகளுக்காகப் போராடும் பெண் ஆர்வலர்கள் பற்றிய நீண்ட வரலாறு உண்டு. ஒரு உலகமயமாக்கப்பட்ட தாராள மயப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தின் உலகில் மைத்திரிபால சிறிசேனா தனது பொதுத் தேர்தல் பிரச்சாரத்தில் 'பெண்கள் ஒரு புதிய இலங்கை' எனும் வாசகம் அவரின் வெற்றிக்கான ஒரு முக்கிய ஊடகமாக அமைந்திருந்தது எனலாம். இலங்கையில் பெண்கள் மத்தியில் தங்கள் பாலினம் குறித்த சுதந்திரம், மரியாதை, ஒரு நல்ல வாழ்க்கை பற்றிய எதிர்கால நம்பிக்கை கிடையாது. இதற்கு அரசியல் பெண்களுக்கு விளைவித்துள்ள கேடுகளே காரணம் ஆகும். பெண்கள் அரசியலுக்குள் வந்தால் அவர்களால் எதனைச் சாதிக்க முடியும்? ஆண்களைப் போல் பெண்களால் எதையுமே தனித்து நின்று செய்ய முடியாது. எதற்கும் ஆண் ஒருவரின் உதவியையே நாடவேண்டும் என்பது தொடர்பான கேள்விக்குறியே நிற்கின்றது. எடுத்துக் காட்டாக சந்திரிக்கா குமாரதுங்க ஜனாதிபதியாக ஆட்சியேற்ற காலத்தில் அவர் பாராளுமன்றத் திற்குள் நுழைந்தால் சில ஆண் அமைச்சர்கள் எழுந்து நின்று அவருக்கு மரியாதை செலுத்துவது இல்லை. பாராளுமன்றிக்குள் ஜனாதிபதி நுழைந்த வுடன் எழுந்து மரியாதை செலுத்துவது அமைச்சர் களின் கடமை ஆனால் அவர்கள் செய்யவில்லை. இதற்கான பின்புல காரணம் என்னவெனில் ஒரு பெண்ணுக்கு நாங்கள் ஏன் மரியாதை செலுத்த வேண்டும் எனும் ஆண் ஆதிக்க நிலைப்பாடே காரணம் எனலாம். இன்று அரசியலில் தவறிழைப் பவர்கள் யாரெனில் படித்தும் பைத்தியக்காரர்களான அரசியல்வாதிகளேதான்.

நோர்வேஜியன் தேர்தல் நிபுணர் கரேவோலன் அவர்கள் சமீபித்திய ஒரு கூட்டத்தில் தற்போதைய அரசியலில் பெண்கள் அரசியல் பங்குபற்றுவதற் கான வாய்ப்புக்களை அரசியல் அமைப்புச் சட்டம் 1/3 பகுதியினருக்கு வழங்கியிருக்கின்றது. இருப் பினும் பெண்கள் அரசியலில் பெண்களுக்கு இடப்பங்கீடு ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். அதே போன்று பழைய ஐரோப்பாவில் நூறு ஆண்டுகள் கழித்து பெண்கள் அரசியலில் பங்கேற்கும் நிலை அதிகரித்துள்ளது. இதே போன்று இலங்கையில் 1931இல் சர்வசன வாக்குரிமையில் பெண்களுக்கும் இடமளிக்கப்பட்ட போது சில ஆண் ஆர்வலர்கள் பெண்கள் கல்வியறிவு இல்லாதவர்கள் அவர்கள் எத்தகைய அரசியல் அனுபவமும் இல்லாதவர்கள் அவர்களுக்கு வாக்குரிமை வழங்கக்கூடாது எனக் கூறிய போதும் பிரித்தானியர் பெண்களுக்கு வாக்குரிமையினை வழங்கியமை பெண்கள் அரசியலுக்குள் நுழைவதற்கான ஒரு திறவுகோலாக அமைந்தது. இருப்பினும் இன்று இலங்கை சமூகத்தில் 50% பேர் பெண்கள் என்றாலும் 5% ஆனவர்களுக்கே அரசியல் அலுவலகங்களில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. இவை இலங்கை அரசியலில் இன்னமும் பெண்கள் பின் தள்ளப்பட்டு கொண்டிருப்பதையே காட்டுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் மகளிர் விவகார அமைச்சானது அவ்வாண்டு நடைபெற்ற இப் பாராளுமன்றத் தேர்தலில், வேட்பாளர் பட்டியலை தயாரிக்கும் போது பெண்களுக்கு அதிக இடங்களை ஒதுக்க வேண்டும் என்று அரசியல் கட்சிகளை வலியுறுத்தியது. அதே போன்று ஒவ்வொரு கட்சியிலும் 30 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தது. அதே போன்று மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் கூட தேசியப் பட்டியலில் ஒரு பகுதி பெண்களுக்கு ஒதுக்க வேண்டும் என அரசியல் கட்சியை கோரினார் ஏனெனில் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பெண்களுக்கு 5 - 8 சதவீதமே ஒதுக்கப் பட்டு இருந்தது. இதைக் கருத்தில் கொண்டே மகளிர் விவகார அமைச்சு இவ்வாண்டு நடைபெற்ற இப் பாராளுமன்ற தேர்தலில் இம் முடிவை அறிவித்திருந்தது. அதுமட்டுமன்றி கடந்த தேர்தலில் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் ஆனது 5 - 8 சதவீதம் இருந்தமை. தென் ஆசிய நாடுகளிலே குறைந்த சதவீதத்தை சுட்டிக்காட்டி நின்றமையும் ஒரு காரணம் ஆகும்.

மகளிர் விவகார அமைச்சானது இவ்வாண்டு நடைபெற்ற பாராளுமன்றத்திற்கு அதிகளவான பெண் பிரதிநிதிகளை உள்வாங்க வேண்டும் எனும் நோக்கில் கடுமையாக முயற்சி செய்தது என்றே கூறலாம். ஏனெனில் இம் அமைச்சு பாராளுமன்றத் தேர்வுக்கு முன் 'எங்களால் நாட்டின் பொருளாதார, சமூக, தேசிய வளர்ச்சிக்கு பங்களிக்க முடியும். ஆகவே நன்றாக படித்த பெண்களை பாராளுமன்றம் தேர்வு செய்ய வேண்டும் என்றும் தேசிய பட்டியலில் கூட பெண்களுக்கு 1/3 பங்கு கிடைக்க வேண்டும்' எனவும் கேட்டுக் கொண்டமை மகளிர் விவகார அமைச்சின் மீதிறன் நடவடிக்கை எனலாம். எனினும் பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் நடந்தது என்ன? கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 50ற்கும் மேற்பட்ட பெண்கள் பரிந்துரைக்கப்பட்ட போதும் வெறும் பத்துப் பெண்களுக்கே இடமளிக்கப்பட்டது. அதே போன்று இம் முறை நடைபெற்ற இப் பாராளுமன்ற தேர்தலில் வெறும் 13 பெண்களே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அதே போன்று தேசிய பட்டியலில் 1/3 பகுதி பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனக் கூறிய போதும் பிரதான கட்சியான ஐ.தே.க. தேசியப் பட்டியலில் 13 ஆசனங்களைப் பெற்றாலும் ஒரே ஒரு இடம் மட்டுமே பெண்களுக்கு வழங்கியுள்ளது. ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி 12 ஆசனங்களைப் பெற்ற போதிலும் பெண் உறுப்பினர் ஒருவருக்கு கூட ஆசனம் வழங்கவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

இன்று ஆட்சியினை கைப்பற்றிக் கொண்டிருக்கும் இப் பெரிய கட்சிகளே தேசியப் பட்டியலில் பெண்களை புறந்தள்ளியிருக்கிறது. அதே போன்று நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் முன்னாள் அமைச்சர் சிறிரங்கா தலைமையில் 11 பெண்கள் 'பிரஜைகள் முன்னனி' யின் கீழ் நுவரேலியா மாவட்டத்தில் போட்டியிட்டனர். அதில் யாரும் வெற்றி பெறவில்லை. இவர்களை மக்கள் புறந்தள்ளினார்களா? அல்லது அரசியல் தலையீடுகள் புறக்கணித்ததா என்பது பெரும் கேள்விக்குறி! இன்று பெண்ணே அரசியலில் நிராகரிக்கும் தன்மை வந்துள்ளது. மக்களால் நிராகரிக்கப்பட்ட அமைச்சர் அமைச்சா் ஒருவரை தேசியப்பட்டியலில் ஊடாக அரசியலில் கொண்டு வந்திருக்கலாம். எல்லாமே ஓர் அரசியல் தந்திரம் தான். பெண்களே! இவ்வாறான சூழ்ச்சிக்காக அரசியல்வாதிகள் இருக்கும் வரை மகளிர் விவகார அமைச்சின் கருத்துக்களோ அல்லது நமது கருத்துக்களோ பலிக்காது. பல்கலைக்கழகங்களிலும் வேறு கல்வி நிலையங்களிலும் பெண்களே நீங்கள் தான் அதிகமானவர்கள் ஆண்களை விட உங்களால் நல்ல கொள்கைகளை வகுக்க முடியும் அதனை நடைமுறைப்படுத்தவும் முடியும். ஆகவே அப் படிப்புடன் நிறுத்திக் கொள்ளாமல் மேலும் கற்றல் தடைகளை முறித்து ஆட்சியில் அரசியலில் நாட்டின் நன்மைக்காக பெண்களின் சுதந்திரத்திற்காக அரசியலில் கால்தடத்தை ஊன்றிக் கொள்ளுங்கள்.

**துஷாந்தினி**
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூகம் மாறுமா?

தற்போதைய காலகட்டத்தில் நாடளாவிய ரீதியி லும் சரி, மட்டக்களப்பு மாவட்டத்திலும் சரி பல்வேறுபட்ட வன்முறைகள் இடம் பெறுகின்றன. அவற்றிலும் கூடுதலாக பெண்கள், சிறுவர்களுக்கே அதிக துஷ்பிரயோகம் இடம் பெறுகின்றது. ஆகவே தான் எமது மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்களுக் கும், சிறுவர்களுக்கும் ஏற்படும் பிரச்சனைகளைக் தட்டிக் கேட்பதற்கென பல்வேறுபட்ட அமைப்புக்கள் சேவை ஆற்றிக் கொண்டு வருகின்றது.

கிராம மட்டத்தில் இருந்து மாவட்டம் ரீதியாக நடக்கின்ற வன்முறைகளை தட்டிக் கேட்டுக் கொண்டு வருகின்றார்கள். இவ்வாறான அமைப்புக்கள் சிறுவர்கள், பெண்களின் நலனுக் காக சேவையாற்றி வருகின்ற போது ஊடகத் துறையும் சில பங்கினை இவர்களுக்கு வழங்கி வருகின்றது.

இவ்வாறு இருந்த போதிலும் ஊடகத்துறை செய்திகள் வெளியிடும் போது சில தவறுகளை விடுகின்றது. அதாவது குறிப்பாக பார்ப்போமானால் எமது நாட்டில் அதிக பாதிப்புக்குள்ளாகின்றவர்களாக சிறுவர்கள், பெண்கள் காணப்படுகின்றார்கள். ஆகவே இந்த ஊடகத்துறையானது பெண்களோ அல்லது சிறுவர்களோ ஏதாவது சிறு தவறுகள் விடுகின்றபோது தாம் அதை தொலைக் காட்சியிலும், பத்திரிகையிலும் செய்தி களாக அவர்களின் முகப் படங்களை போட்டு செய்தி வெளியிடுகின்றனர்.

ஆகவே இங்குதான் நாமும் ஊடகத் துறையினரும் சிந்திக்க வேண்டும். ஏன் என்றால் ஒரு சிறுவனோ அல்லது பெண்ணோ ஒரு இடத்தில் களவு செய்கிறார்கள் என்றால் அதனை அவ் இடத்தில் வைத்து யாரோ ஒரு நபர் படம் பிடித்து அதனை ஊடகத்துறைக்கு வழங்குகின்றார். எனவே இவ்வாறு வழங்குபவர்கள் தான் முதலில் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களை சிந்தித்து பார்க்க வேண்டும். அதாவது இவர்கள் செய்திகளை பதிவு செய்வதற்காக மற்றவரினை சிந்திக்காமல் அதனை செய்திகளாக தொகுத்து வெளியிடுகின்றார்கள். இவ்வாறு செய்திகளைப் பதிவு செய்கின்றவர்கள், வெளியிடுகின்றவர்கள் சற்று சிந்தியுங்கள். பெண்ணோ அல்லது சிறுவர்களோ எவ்வாறு இருக்கின்றனர் என்று சிந்திக்கமாட்டீர்கள். உதாரணமாக களவு செய்கின்ற சிறுவனையோ, பெண்ணையோ அவதானிப்போமானால் ஏன் இவர்கள் இவ்வாறு செய்ய வேண்டும் என்ன தேவை இருக்கின்றது. இதனை எடுப்பதற்குரிய காரணம் என்ன என ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இவ்வாறு வெளியிடுவதால் அவர்கள் மறைமுகமாக பல்வேறுபட்ட பிரச்சனை களுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது. உள தாக்கம், சமூகத்தினால் புறக்கணிப்பு, சில சமயங் களில் குடும்பத்தினால் ஒதுக்கி வைப்பு, இதனால் இவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக மாறுகின்றது. குடும்ப பிளவுகள் ஏற்படும், தனிமையில் வாழ முயற்சிப்பது, கூட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடாமை. திருமணம் ஆகாத பெண்கள் என்றால் வாழ்க்கை அமைய முடியாத நிலை, சமூகத்தினால் இழிவாக பேசுதல், தற்கொலை முயற்சி, சிறு தவறு செய்தவர்கள் பெரிய தவறுகளை செய்ய எத்தனிப்பது, வழமையான செயற்பாடுகள் முடக்கப் படல், மறைந்து வாழ முயற்சித்தல் போன்ற பல்வேறுபட்ட சமூகம் பிரச்சனைக்கு இவர்கள் உள்ளாகின்றனர்.

சமூக அமைப்புக்களும் ஊடகத் துறைகளும் வன்முறை ஏற்படும்போது அதனை தட்டிக் கேட்டு அதில் இருந்து பாதுகாப்பு நோக்கி செயற்பட வேண்டும்.

எனவே இவ்வாறான தவறுகள் நடைபெறும் போது கிராம மட்டக்குழுக்கள் அந்த செய்தி குறிப்பிடும் நபர்களை கண்காணிப்பு செய்ய வேண்டும். அத்தோடு தவறு செய்யும்முன் எவ்வாறு இருந்தார். தற்போது செய்தி வெளியிட்டபின் எவ்வாறு இருக்கின்றார் என்பதினை ஆராய்ந்து தகவல்களை எடுக்க வேண்டும்.

அப்போது தான் இவ்வாறான செய்திகளை வெளியிடும் ஊடகத்துறையினருடன் இது சார்ந்து கலந்துரையாடலாம். ஆகவே கவனத்தில் கொள்ளுங்கள் ஊடகத்துறையில் வெளியிடுவது தவறல்ல ஆனால் ஒருவரை பாதிக்கும் வகையில் அமைய கூடாது.

**திருமணம் ஆகாத பெண்கள் என்றால் வாழ்க்கை அமைய முடியாத நிலை, சமூகத்தினால் இழிவாக பேசுதல், தற்கொலை முயற்சி, சிறு தவறு செய்தவர்கள் பெரிய தவறுகளை செய்ய எத்தனிப்பது, வழமையான செயற்பாடுகள் முடக்கப்படல், மறைந்து வாழ முயற்சித்தல் போன்ற பல்வேறுபட்ட சமூகம் பிரச்சனைக்கு இவர்கள் உள்ளாகின்றனர்.**



ஆகவே இவற்றினை பொதுமக்கள் நாம் மட்டும் சிந்திக்க கூடாது. ஊடகத்துறையும் சிந்திக்க வேண்டும். இனிவரும் காலங்களில் பெண்கள், சிறுவர்கள் தொடர்பாக செய்திகளை வெளியிடும் போது படங்களை போட்டு செய்தி வெளியிடுவது நிறுத்தப்பட வேண்டும். எனவே இதனை வலியுறுத்துவது. நம் ஒவ்வொருவரினதும் வகிபங்காக உள்ளது.


ஆகவே ஊடகத்துறை செய்திகள் வெளியிடுவது தவறல்ல ஆனால் பெண்கள், சிறுவர்கள் தொடர்பான செய்திகள் வெளியிடும் போது கூடுதலான கவனம் எடுத்து செய்திகள் வெளியிட வேண்டும். அப்போது நாம் மேற்கூறிய பிரச்சனைகளில் இருந்து இவர்களை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதனை கூறிக்கொள்கின்றேன்.

**ச.சுசி**
வாகரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல பெயர் எனக்கு



**தி**ருமண பந்தத்தினால்
எனக்குப் பெயர்
ஐந்து பிள்ளைக்காரி
கணவன் விட்டுச் சென்றதால்
ஜாதக தோசக்காரி
வெளிநாடு சென்றதால்
வெளிநாட்டுக்காரி
இதனால்
பணக்காரி.....
ஆகவே...
எனக்குப் பெயர் கோமதியல்ல
எனக்கு பல பெயர்...

**ஓசாநிதி**

# முகம்

**பெ**ண்ணின் குரல் காலம் தோறும், வரலாற்றுக் கட்டங்கள் தோறும், ஒடுக்கப்பட்டுக் கொண்டே வந்துள்ளது. "மெல்லப் பேசுவதும், "பேசாது இருப்பதும்" நமது பண்பாட்டுத் தளத்தில் பெண்ணிற்குரிய நற்குணங்களாக வகுத்து வைக்கப்பட்டுள்ளன. அதை மீறி ஒலித்த பெண் குரல்களையும் பக்தி முலாம் பூசி பண்பாட்டைக் காவல் காக்க வைத்துள்ளது எமது சமூகம்.

இன்றைய சம காலத்தில் வீட்டிலும் வெளியிலும், வேலைத் தளத்திலும் ஓரளவு பெண்ணின் குரல் ஓங்கி ஒலிப்பதை அவதானிக்கின்றோம்.

தன்னிலையுணர்ந்து, தன் உரிமையையும் உணரும்போது பெண்ணின் குரல் ஓங்கி ஒலிக்கத்தான் செய்யும்.

"நாணமும் அச்சமும் நாய்களுக்கே வேண்டும்" தனக்கெதிரான அநீதிக்காக, சமூகப் பாரபட்சத்துக்கெதிராக ஆங்காங்கே ஒலித்த பெண் குரலை இன்னும் உரமுடனும் உரப்புடனும் ஓங்கி ஒலித்திடச் செய்ய நாமெல்லாம் பிரக்ஞை பூண்டிட வேண்டும்.

இனி வீடு அல்லது வீட்டுத் தளம் என்பதனை எடுத்தால் வெறும் கற்களால் மட்டும் ஆனதன்று வீடு. அது மனித சமூக நிறுவனத்தின் அத்திவாரக்கல். நல்ல உறவுகளின் விளை நிலம். ஆகவே பெண்ணுக்கு முதன்மை அளிக்காத வீடு, ஆனந்த இல்லமாக அமைய முடியாது. துரதிஸ்டவசமாக பெண்களுக்கெதிரான வன்முறை அவளின் வீட்டுக்குள்ளேயே ஆரம்பமாவதையும் இன்று காண்கின்றோம்.

எனவே ஆணும் பெண்ணும் சமத்துவமாய் நின்று பரஸ்பரம் அவரவர் உரிமையை மதித்து உணர்வுகளைக் கௌரவித்தல் மகிழ்ச்சியான இல்லங்கள் உருவாகும். இதனால் பெண்ணின் குரலும் அந்த ஆகாய வெளிதாண்டி ஓங்கி ஒலிப்பது திண்ணம்.

**அம்பலவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லெறி பெண்மீது

"களம்" பெண்ணிய கலையாக்க வெளி, ஐந்து நாள் இயல் இசை நாடகப் பட்டறையாக மன்ரேசா தியான இல்லத்தில் ஜூலை 19-23 2018 ஆகிய காலப்பகுதியல் இடம் பெற்றது. இதில் பல வளவாளர்கள், வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெண்ணிய குழு சார் கலைஞர்கள் பங்கேற்றிருந்தனர். பயிற்சி வகுப்பின் இறுதி நாளன்று மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழகத்தில் (சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகம்) வளவாளர்களால் பல அளிக்கைகள் பகிரப் பட்டன. இதில் ஒரு அளிக்கை அங்கிருந்த ஒரு அழகிய மரத்தடியில் வளவாளர் குமாரி கமகேயின் கவிதா நிகழ்வாக தமிழில் மொழி பெயர்த்து குமாரி மற்றும் அ.மங்கை அவர்களால் வழங்கப்பட்டது. அக் கவிதை அ.மங்கையின் மொழிபெயர்ப்பில் கீழ் வருமாறு.

ஆதாமின் ஒரேயொரு விலா எலும்பினால்
உருவாக்கப்பட்டதால்
உங்களது பேருக்கு உரியவள்
உங்களுக்கே சொந்தமானவள்

உங்களுடைய - சொத்து, உடைமை, சாமான்,
துண்டு, பண்டம், மாங்கனி,
காய்கறி, பால்தேநீர், அயிட்டம்...

அவள்தான் ஆசை
அவள்தான் ஏக்கம்
அவள்தான் திருப்தி, அதிருப்தி, வெறி, சந்தேகம், பொறி, பாரிய இரகசியம், வலை, தலைவிதி, மரணம்...உணர்வு, அறிவு, புரிதல்...

உங்களோடு இருக்கும் ஒருத்தரையும் விடாமல் அறுபத்து நான்கு மாயங்களில் ஒரு மாயத்தினாலாவது ஏமாற்றிய மாயக்காரி !
அனைத்து மணமான ஆண்களின் கொடுமைக்காரப் பெண்டாட்டி...
பாம்பினால் ஏமாற்றப்பட்ட
பாவத்திற்குத் தூண்டப்பட்ட,
தனது கணவனைப் பாவத்திற்குத் தூண்டிய அவள்
பார்.... அவள்தான் சாபம்
அவள்தான் உன் பகை!
திரும்பிப் பாராமல் போ என்று கடவுள்
கட்டளையிட்டபோது
சேர்த்து வைத்த சொத்தை
விட்டு விட முடியாமல்
பேராசையுடன்
திரும்பிப் பார்த்து

உப்புத் தூணாகி நின்றாள்

அவள் லொத்தின் மனைவி
அவள்தான் ஆசை
அவள்தான் பேராசை
சொதோமா கொமோராவ

பெண்ணாக நீ புத்தம் அடைய முடியாது
காலகாலமாக பூசை செய்தாலும்
புத்தரை அடைய முடியாது
என்கிறது ஹீனயானா
தவத்தைக் கலைக்கும் மாறன் தூது அவள்
அவள் தன்ஹா, ஹதி, ஹங்கா
அவள் ஆசை காமம், விறலி
எனப்படும் சாகசக்காரிகள்.

உங்களது வரலாற்றுப் பாதையின்
எல்லை அவள்
உங்கள் தடங்களை மாற்றுபவள்
பயம்... அவள்!

காத்திருந்தது போதும் இனி எடுங்கள்
அந்தக் கற்களை
எறியட்டும் முதற் கல்லை உங்களில் ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள்தான் சீதாவாம்
இராவணன் உருகிய அந்த அழகி
ஐயோ இராமா!
சிக்கிவிட்டாய் நன்றாக
இரத்தக் கடலான
முடிவில்லா ஒரு யுத்தத்தில்....

ஏன் இன்னமும் மௌனமாகப்
பார்த்துக் கொண்டிருக்கிறாய்?
எடு இப்போது அந்தக் கற்களை
எல்லாக் கற்களையும் இந்த
இரத்தத்தில் ஊற வையுங்கள்
இனி இப்போதே அவளை
பலியெடுங்கள்.....

ஒழுக்கம், கலாசாரம், பலாத்காரம், விவாகம்
என்பவற்றின் உடைகளைக் கழற்றிவிட்டு
அவள்....உணரக்கூடிய ஓர் காதலுக்காக....
நிர்வாணமாகிய பாவத்திற்கு!

அவள் அனைத்துப் பெட்டை நாய்களின் மகன்களையும்
தாங்கிய கர்ப்பப்பையான பாவம் மட்டும் போதாதா?
பால் கொடுத்த இரு முலைகளான சாபம்
மட்டுமே போதாதா?
இனத்துக்கான சகல யுத்தங்களில்
தூக்கப்பட்ட ஆயுதங்களுக்கு
கோபங் கொண்ட துவக்குகளுக்கு
சூடான ஆண் உறுப்புகளுக்கு
உடலுறவு கொள்ள
வெறுப்பும்
ஆசையும்
பழிவாங்கலும்
போட்டியும், போதியுமான
பூமித்தாய்
அவள்.

இனி எறியுங்கள் முதலாவது கல்லை
வெல்ல முடியாமற்போன சோகத்திற்காக
சித்தம் கலைந்ததால்.....(எறியுங்கள்)
ஏனெனில் அவள் ஓர் யோனி மட்டும்தானே?
பாத்திருந்தது போதும்
முன்னுக்கு வாருங்கள்
உங்களில் யாராவது
பெண்ணால் உருவாக்கப்படாதவர் இருந்தால்



அடியுங்கள் முதற் கல்லை
இப் பெண் மீது.....
இதுதான் உங்கள் முன்னேற்றம்!

இதுதான் காலம்!
இவ் உலகத்தை வெல்வதற்கு
அனைத்துக் கர்ப்பப் பைகளையும்
வெல்வதற்கு
அனைத்து யோனிகளையும் வெல்வதற்கு

பார்த்திருந்தது போதும்
அடியுங்கள் அந்தக் கற்களை
இப் பெண் மீது
அனைத்துப் பெண்கள் மீதும்.
உனக்குள்ளே, உங்களுக்குள்ளே...
சிறு துளியாவது இருக்கும்
பெண்மை மீது

கடைசியாக ....
அம்மாக்களை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொடுக்கும் மரம்

முன்னொரு காலத்தில் ஒரு அப்பிள் மரம் இருந்தது. அந்த மரம் ஒரு சிறுவனை நேசித்து வந்தது. ஒவ்வொரு நாளும் அந்தச் சிறுவன் வந்து இலைகளைக் சேர்த்து கிரீடம் செய்து வன அரசனாகக் கற்பனை செய்து விளையாடுவான். மரத்தின் மீது இருந்து கிளைகளைப் பிடித்து அங்குமிங்கும் தொங்கியபடி ஊஞ்சலாடுவான். அப்பிள் பழங்களை பறித்து உண்பான். மரத்துடன் ஒளித்து விளையாடுவான். களைத்தவுடன் நிழலில் படுத்து உறங்குவான். அந்தச் சிறுவன் மரத்தை மிகவும் நேசித்தான்.

நாட்கள் உருண்டோடின. சிறுவனும் இப்போ பெரியவனாக வளர்ந்து விட்டான். மரத்திற்கோ ஒரே தனிமை. ஒரு நாள் அந்தச் சிறுவன் மரத்திடம் வந்தான். அப்போ மரம் அவனை பார்த்துக் கூறியது.

**மரம் :-** வா மகனே, என் கிளைகளில் ஏறி விளையாடு, பழங்களைச் சாப்பிடு. என் நிழலில் விளையாடி மகிழ்ந்திரு.

**சிறுவன் :-** நான் இப்போ அப்படி ஏறி விளையாட முடியாதபடி மிகவும் வளர்ந்து விட்டேன். இப்போ தெல்லாம் பொருட்கள் வாங்குவதும், வேடிக்கை களியாட்டங்களில் ஈடுபடுவதும் மட்டும் தான். ஆனால் இதற்கெல்லாம் என்னிடம் பணமில்லை.

**மரம் :-** என்னை மன்னித்துவிடு. என்னிடம் பண மில்லை. பழங்களும் இலைகளும் தான் இருக்கின்றன. மகனே எனது பழங்களைக் கொண்டு போய் விற்றால் உனக்குப் பணம் கிடைக்கும். நீ சந்தோஷ மாய் இருப்பாய்.

அந்தச் சிறுவன் மரத்தின் மீது ஏறி, பழங்களைப் பறித்து, சேர்த்துக் கொண்டு போய் விற்றான். மரம் மகிழ்ந்திருந்தது. ஆனால் நீண்ட காலம் சிறுவன் வராதிருந்தான். பின்பு மீண்டும் ஒரு நாள் திரும்ப வந்தான். மரம் ஆனந்தத்தால் அசைந்தாடிய படி கூறியது...

**மரம் :-** வா மகனே என் தண்டில் ஏறி கிளைகளைப் பிடித்து ஊஞ்சலாடி மகிழ்ந்திரு

**சிறுவன் :-** எனக்கு அதிக வேலை உண்டு. எனக்கு மனைவி குழந்தைகள் ஆகியோர் வேண்டும். அவர்களோடு வாழ எனக்கு ஒரு வீடு வேண்டும். தருவாயா?

**மரம் :-** என்னிடம் வீடு இல்லையே. கானகம் தான் எனது வீடு. ஆனால் எனது கிளைகளை வெட்டி எடுத்து வீடு கட்டிக்கொள். அப்போ சந்தோச மாயிருப்பாய்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அப்படியே அவன் மரத்தில் ஏறி கிளைகளை வெட்டி எடுத்துச் சென்றான். மரம் மகிழ்ந்திருந்தது. ஆனால் சிறுவன் நீண்ட நாட்கள் வரவில்லை. பின் மீண்டும் ஒருநாள் அவன் வந்தபோது மரத்துக்கு அளவில்லா ஆனந்தம். கதைக்கக் கூட முடிய வில்லை. மெல்லியகுரலில் கூறியது.

**மரம் :-** வா மகனே வந்து விளைாடு

**சிறுவன் :-** விளையாடும் வயது அல்ல எனக்கு இப்போ, எனக்கு வயது போய்விட்டது. மனவேதனை யாகவும் இருக்கிறது. இங்கிருந்துவெகு தூரம் கொண்டு செல்லக் கூடிய தோணி ஒன்றுதான் வேண்டும். தருவாயா?

**மரம் :-** என் பெரியதண்டை வெட்டி தோணி செய்துகொள். அதை நீரில் செலுத்தலாம். சந்தோஷ மாயிரு.

அவன் மரத்தை வெட்டி, தோணி செய்து நீரில் செலுத்தி சென்றுவிட்டான். மரம் மகிழ்ந்திருந்தது. ஆனால் உண்மையில் அந்த மகிழ்ச்சி நிறைவானதாக இருக்கவில்லை. நெடுங் காலத்திற்குப் பின்னர் அவன் மீண்டும் வந்தான் மரம் சொல்லிற்று.

**மரம் :-** மகனே, எனக்கு இப்போ மனவருத்தமாக இருக்கிறது. உனக்கு கொடுப்பதற்கு என்னிடம் ஒன்றுமேயில்லை. பழங்கள் எல்லாமே போய் விட்டன. எனக்குப் பல்லெல்லாம் பலவீனப்பட்டு விட்டது. கிளை ஒன்றுமே இல்லையே நீ ஊஞ்சலாட எனக்கு வயது போய் விட்டது. தண்டு போய் விட்டது.

**சிறுவன் :-** அதில் ஏறவும் முடியாது. எனக்கு ஏறுவதற்கே களைப்பாக இருக்கிறது.

**மரம் :-** உனக்கு எதாவது தரலாமென்றால் என்னிடம் ஒன்றுமில்லையே. நான் முதிர்ந்த ஒரு குற்றி மட்டும் தான் எனக்கு மிகவும் மனவருத்தமாக இருக்கிறது. என்னை மன்னித்துக் கொள்.

**சிறுவன் :-** எனக்கு இப்போ ஒன்றும் பெரிதாகத் தேவையில்லை. நான் உட்கார்ந்து ஆறுதலாக இளைப்பாற இடம் இருந்தால் அதுவே போதும்.

**மரம் :-** அப்படியானால், இந்த முதிர்ந்த குற்றி உனக்குப் போதும். வா மகனே வந்து உட்கார்ந்து இளைப்பாறு. அவன் அப்படியே செய்தான். மரம் மகிழ்ந்துபோயிற்று.

நன்றி.

உளவள ஆலோசகர் கெட்சி சன்முகம் அவர்களினால் நடத்தப்பட்ட "உளவள மேம்பாடு" பயிற்சி வகுப்பின் கையேடுகளில் இருந்து இக் கதை பெறப்பட்டது.

## **கேள்வி :-** மரமாய் இருப்பது சிறந்ததா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய சூழலில் பெண்களின் கல்விக்கான தேவைப்பாடுகள்

"ஒரு நாட்டில் பெண்கள் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கின்றார்களோ அவ்வளவு தூரமே அந்நாடு முன்னேறும்."

- ஜவஹர்லால் நேரு

நாடு செழுமை அடையவும் வீடு சுபீட்சம் பெறவும் எமது தாயாக, மனைவியாக, பாட்டியாக, பேர்த்தியாக, சகோதரியாக, தோழியாக என்றவாறு பல்வேறு பாத்திரம் ஏற்கும் பெண்கள் கல்வியில் உயர வேண்டும்.

பெண்ணை தாயாகப் போற்றுவது மட்டு மல்லாமல் பிறந்த நாட்டினை தாய் நாடு என போற்றுகின்றோம். நாம் பேசுகின்ற மொழியை தாய்மொழி என மதிக்க கற்றுக் கொண்டுள்ளோம். ஆகாயத்தை ஆகாஸ வாணி என்றும் பூமியை பூமா தேவி என்றும் ஓடும் நதிகளை கங்கை, யமுனை, காவேரி எனவும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கியே சித்தரிக்கப்பட்டுள்ளது.

**பெண்கள் பற்றிய அறிஞரின் சிந்தனைகள்**

1. ஆண்டவன் படைப்பில் அரியது பெண்.
   மகாத்மா காந்தி
2. ஓர் ஆணுக்கு கல்வி அளிப்பது குடும்பத்தில் ஒருவருக்கு கல்வி அளிப்பதாகும். பெண்ணுக்கு கல்வி அளித்தால் அது முழுக் குடும்பத்திற்கும் கல்வி அளிப்பதாகும்.
   நேரு
3. பெண் இறைவனின் படைப்புக்களில் எல்லாம் அழகானவள்.
   மில்டன்
4. பெண்ணின் மடியில் இறையன்பு வாழுகிறது.
   இக்பால்
5. மக்களை பேணவும் உலகினை பாதுகாக்கவும் பெண் கல்வி அவசியம்.
   பாரதிதாசன்

**சமூக மரபிலே பெண்களின் நிலை**

முற்காலத்தில் பெண்கள் வெளி உலகத் தொடர்பு அற்றவர்களாகவும் வீட்டு வேலைகளுக்கு மட்டுமே உகந்தவர்கள் என்ற நிலையும் காணப் பட்டது. சமூகத்தில் பெண்களை ஒடுக்கும் சில மரபு ரீதியான சிந்தனைகள் வலுப்பெற்றுக் காணப் பட்டன. கணவன் இறந்து விட்டால் மனைவி உடன் கட்டை ஏற வேண்டும் வேறு திருமணம் செய்யக் கூடாது. பொட்டு, பூ வைக்காமல் மங்கல காரியங்களில் முன்னால் வராமல் வெள்ளை சேலை அணிந்து மூலையில் ஒதுங்கி நிற்க நிர்ப்பந்திக்கப் பட்டார்கள்.

பெண்களை ஒடுக்கும் சில பழமொழிகளை கூறி அவர்களை சமூகத்தில் இருந்து ஓரங்கட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கும் நிலையே காணப்பட்டது. "அடுப்பூதும் பெண்ணிற்கு படிப்பெதற்கு?" என்று பெண் கல்வி மறுக்கப்பட்டது. "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என கணவனை நம்பியே வாழ வேண்டும் என்றனர். "பெண் சிரிச்சா போச்சு புகையிலை விரிச்சா போச்சு" என சிரிப்பதற்கும், பேசுவதற்கும், நடமாடுவதற்கும் பெண்களுக்கு வரையறை இட்டனர். "இந்திரன் கெட்டதும் பெண்ணாலே, சந்திரன் கெட்டதும் பெண்ணாலே" என்று ஆண்களின் தப்புக்களுக்கு பெண்களே காரணம் என சாடுகின்றனர். பெண் பிள்ளை பிறந்தால் கள்ளிப் பால் கொடுத்து கொலை செய்யவும் துணிந்தனர். சில நாடுகளில் வரதட்சனை என்ற பெயரில் பெண்களை கொடுமைப் படுத்துகின்றனர். திருமணத்தில் பெண்ணையும் கொடுத்து காணி, வீடு, நகை, பணம், பொருள் கொடுத்து திருமணம் செய்து வைக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு பெற்றோர் உட்படுத்தப் பட்டுள்ளனர். பெண் சிசுக் கொலை, குழந்தை திருமணம், பெண் அடிமைத்தனம், வரதட்சனைக் கொடுமை, பாலியல் துஷ்பிரயோகம், குடும்ப வன்முறை என பெண்களுக்கு விளைவிக்கப் படும் வன்முறைகள் ஒழிய வேண்டும். உலகளாவிய ரீதியில் நடத்தப் பட்ட ஆராய்ச்சிகளின் அடிப் படையில் மூன்றில் ஒரு பெண் உடல், உள, பாலியல் ரீதியான வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**பெண்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள்**

ஐக்கிய நாடுகள் சபையால் மார்ச் 8ம் திகதி சர்வதேச பெண்கள் தினமாக பிரகடனப் படுத்தி சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. சர்வதேச பெண்கள் தினத்தன்று சீனா, ரஷ்யா, வியட்நாம், மங்கோலியா போன்ற நாடுகளுக்கு விடுமுறையாக அறிவிக்கப் பட்டுள்ளது. அன்று மனைவி, மகள், சகோதரி, சக பணிபுரியும் பெண்களுக்கு பரிசுகளை ஆண்கள் வழங்கி வருகின்றனர்.

பெண்கள் ஒடுக்கப்பட்ட நிலை மாறி வருகின்றது. வைத்தியம், சட்டம், விண்வெளி விஞ்ஞானி, ஜனாதிபதி, பிரதமந்திரி, கல்வியியலாளர், ஒளிபரப்பாளர், ஊடகவியலாளர் என சகல துறை களிலும் பெண்கள் ஆண்களுக்கு சமமாக திகழ்கின்றனர். 2024 ம் ஆண்டளவில் முதலாவது பெண் சந்திரனில் காலடி வைக்கவுள்ளதாக நாசா தெரிவித்துள்ளது. இந்த புதிய திட்டத்திற்கு ஆர்ட்டிமிஸ் எனப் பெயரிடப்பட்டுள்ளது. எமது இலங்கை திரு நாட்டிலே 52 வீதமான பெண்கள் உள்ளனர். இவற்றில் 1.8 வீதமான பெண்கள் உள்ளூராட்சி மன்றத்தில் உள்ளனர். 2.8 வீதமான பெண்கள் பாராளுமன்றத்தில் உள்ளனர். இந் நிலை உயர வேண்டும். சமூகத்தின் ஆணி வேராக திகழும் அரசியலிலும் தற்கால பெண்கள் பிரகாசிக்க வேண்டும்.

1948ம் ஆண்டு மனித உரிமை பிரகடனமானது உறுப்புரிமையில் அனைவரும் சமம் என வலியுறுத்துகிறது.

1981ம் ஆண்டு ஒக்டோபர் 5 ல் பெண்களுக் கெதிரான எல்லா விதமான பாராபட்சங்களையும் இல்லாதொழித்தல் தொடர்பாக சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு முறையிடக்கூடிய 1938 என்ற தொலைபேசி இலக்கம் நடைமுறையில் உள்ளது.

**பெண்களுக்கான கல்வி ஏற்பாடுகள்**

"கல்வி என்பது உலகை மாற்ற கூடிய மிகவும் சக்திவாய்ந்த ஆயுதம் ஆகும்."

என்றார் தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் 1993 ஆம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு வென்றவரான நெல்சன் மண்டேலா அவர்கள்.

மனிதனுடைய உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றினை கல்வி மேலோங்கச் செய்கிறது. "மன்னனுக்குத் தன் தேசத்தில் மட்டுமே மதிப்பு என்றும், கற்றவர்களுக்கு சென்ற இடமெல்லாம் மதிப்பு" என்கின்றது மூதுரை. "ஒரு நாட்டின் வளர்ச்சி மக்களின் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது" என்றார் ரூஸோ. எனவே, மக்கள் கல்வி கற்கும் போது அது அவர்களை மட்டுமல்ல முழு சமுதாய ஈடேற்றத்திற்கும் பங்களிக்கும்.

கல்வி உரிமை ஆண், பெண் இருபாலாருக் கும் சமமாக வழங்கப்பட வேண்டும். ஒரு பெண் கல்வி கற்று கற்கும் விடயங்களை செம்மையான வாழ்க்கைக்கு பயன்படுத்தும்போது அது முழு குடும்பத்துக்கும் பங்களிப்போடு அச்சமுதாயம் முன்னேறவும் வாய்ப்பளிக்கும்.

இருக்கு, யசுர் வேதத்தில் பெண்களுக்கு கல்வி வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடுகின்றனர். "பிரம்மச்சரியம் என்னும் மாணவப்பருவம் நிறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற பின்னரே தனது மகளை மணமுடித்து கொடுத்தல் தந்தையின் கடமை."

எனக் குறிப்பிடப்படுவதிலிருந்து பெண் கல்வி அவசியம் என அறியமுடிகிறது.

பெண்களை அடிமைகளாக நடத்தும் போது அடிமைப்பெண்களிலிருந்து அடிமை குணமுள்ள குழந்தைகளே உருவாகும். எனவே, குழந்தைகளின் உள்ளத்தில் சுதந்திர உணர்வு வளர பெண்களுக்கு சுதந்திரம் , பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். கடந்த 200 வருடங்களில் தொடரும் பெண் கல்வி இலங்கை நாட்டை தென்னாசிய நாடுகளை விட முன்னேற்றி இருக்கிறது. குழந்தை வளர்ப்பு, தாய் சேய் நல பராமரிப்பு என்பனவற்றில் உயர் அபிவிருத்தியை எட்டி வருகிறது. உலக அரசியலில் பெண் பிரதமர் என்ற பெருமையை நம் நாட்டு பிரதமரான கௌரவ சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களையே சாரும். மேலும், ஆசிய நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமை கௌரவ சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களே. எமது மண்ணுக்கு பெருமை ஈட்டி பெண்களால் எதையும் சாதித்து காட்ட முடியும் என உலகிற்கு நிரூபித்துக் காட்டியுள்ளனர். பெண்களுக்காக யாழ்ப்பாணத்தில் அமெரிக்க மிஷனரியினரால் 1813 முதலாவது பாடசாலை தொடங்கப்பட்டது. பெண்களுக்காக தென்னாசிய நாடுகளில் உருவாக்கப்பட்ட முதலாவது பாடசாலை இதுவாகும். ஆகவே, பெண் கல்வி வழங்கப்படும் போது முழுத் தேசத்திற்கான வளர்ச்சியை எட்டும் எனபதில் எதுவித ஐயமுமில்லை.

"ஒரு தாயின் முகமே ஒரு குழந்தையின் முதல் பாட புத்தகம்" என்கின்றனர் கல்வியலாளர்கள். எனவே, குழந்தை ஆரோக்கியமாக வளர பெண் கல்வி அவசியமாகும்.

அடிப்படை சுகாதாரம் பற்றிய அறிவு, இனப்பெருக்க சுகாதாரம் பற்றிய அறிவு, குடும்ப சுகாதாரம், குடும்ப கட்டுப்பாடு, குடும்பத் திட்டமிடல், எச்.ஐ.வி பாதுகாப்பு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம் தொடர்பான அறிவு பெண் கல்வி மூலம் கிடைக்கின்றது.

பெண்களிடம் உள்ள அறிவு, திறன் விருத்தி செய்வதன் மூலம் பெண்கள் சீராக வாழ்வதோடு அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும்.

பெண்கள் உடல், உள ஆரோக்கியத்துடன் கூடிய வாழ்க்கையை வாழ பெண் கல்வி அவசியம். பெண்களின் உடல் நலமும், சிரித்த முகமும் அழகிய குடும்பத்தை பரிணமிக்கும். பெண்கள் ஆளுமை உடைய சமூகத் திறன் மிக்கவர்களாக மாறும்போது அது முழு குடும்பத்திற்கும் பங்களிப்பு செய்யும்.

வாழ்க்கையில் ஏற்படும் சவால்களுக்கு புத்திசாதுரியமாக முகங்கொடுக்க பெண்கல்வி அவசியமாகும். வீட்டு வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம், குறைந்த வயதில் திருமணம் என்பனவற்றிலிருந்து பெண்கள் தங்களை பாதுகாத்து கொள்ள பெண்கல்வி அவசியமாகும். பெண் கல்வி கட்டாயமாக்கப்படும் போது சிறந்த தொழில் வாய்ப்பை பெற்று பெண்கள் பொருளாதார முன்னேற்றம் அடையவும் குடும்பத்தில் ஏற்படும் பொருளாதார பிரச்சினைகளுக்கு பணத்தினை கையாளவும் பெண்களுக்கான கல்வி அவசியமாகும்.

"பெண்களை உயர்வடையச் செய்யவில்லை என்றால் உங்களுக்கு உயர்வடைய எந்தவித வழியும் இல்லை" என்கிறார் சுவாமி விவேகானந்தர். எனவே, பெண்களுக்கு சிறந்த கல்வி வழங்கப்ப வேண்டும்.

பெண்களுக்கு கல்வி அளிக்கப்படுவதால் வளர்முக நாடுகளில் பெண்களின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்கிறது. சுய உணர்வு, சுய உரிமை என்பனவற்றை பெண்கள் பாதுகாத்துக் கொள்ள பெண் கல்வி அவசியம் ஆகும்.

கற்ற பெண்ணானவள் தன்னை மேம்படுத்திக் கொள்வதோடு மட்டுமல்லாமல் ஒழுக்க விழுமியங் களுடன் கூடிய கல்வி கற்ற சமுதாயத்தை உருவாக்கும். குடும்பங்கள் முன்னேற்றகரமான வாழ்க்கை தரத்தை அடைய பெண்களின் . கல்வி பங்களிக்கும். நாடு செழுமை அடைய , வீடு சுபீட்சம் பெற பெண்களைப் போற்றுவோம். பெண்களை மதிப்போம். பெண்ணின் உரிமைகளைப் பாதுகாப் போம்.பெண் கல்வியை மேம்படச் செய்வோம்.

**திருமிகு சங்கீதா அருள்தாஸ்**
ஆசிரியை, சந்திவெளி சித்திவிநாயகர் கனிஷ்ட வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காயாத மை கொண்டு...



## யுத்தத்தில் பிரிந்த அக்காச்சிக்கான தங்கையின் மடல்

என்னுயிரில் கலந்து என்றும் நினைவில் வாழும் எங்கள் இனிய உறவே உங்களுக்கு எங்கள் வணக்கம். மேலும் தங்கள் மடல் மூலம் மனதில் எண்ணங்களை உருவங்களை தொகுப்பாக்கி வலிமைபடைத்த உங்கள் கருத்துக்களை அள்ளித் தெளித்தீர்கள் அதற்கு முதலில் நன்றி.

அக்கா, ஆண்ட பரம்பரை நாங்கள் ஆனால் இன்று அந்த நினைவுகளே எம்மை அழ வைத்துக் கொண்டு வாழ்வில் பயணிக்க வைக்கிறது.

ஆழமான வடுக்களை உடம்பில் தாங்கினாலும் உள்ளத்தில் பெற்ற வடுக்களால் இன்னும் நாம் நிமிர்ந்து நிற்கின்றோம். சமூகத்தில் மனிதம் நிரம்பிய மானுடராய். எம்மை பார்த்து எள்ளி நகையாடி வாழ்ந்த உறவுகளை கூட இன்று வியப்பிலாத்தி எமதூரில் வாழ்ந்து வருகின்றாள் தங்கை வாணி.

வாணி நடைபயின்ற ஊரில் இன்று நடைமறந்து தவழ்ந்து திரிகிறாள். மனதில் மாறாத பெரும் தேடலுடன் மாண்புமிக்க மனுசியாய்.

இவ்வாறு இன்னும் இன்னும் வடுக்களை சுமந்தாலும் வாழ்வின் படிகளில் நாம் அனைவரும் கைகோர்த்து நடை போடுகிறோம். மாற்றுத் திறனாளிகள் நாம் மாற்றம் காண துடிப்போடு உலாவுகின்றோம். குறிப்பாக இத்துணைக்கும் உறுதியான அங்கமாய் இருப்பது மாற்றுத் திறனாளிகள் அமைப்பும். அத்தோடு பெண்கள் என்ற ரீதியில் நாம் உலவ ஊன்று கோலாய் திகழும் பெண்கள் அமைப்பும் என்பதை தங்களிற்கு மதிப்புடன் அறியத்தருகின்றோம்.

உங்கள் வரவை எதிர்பார்த்த எமக்கு தங்கள் மடல் கண்டதும் மாபெரும் சந்தோஷம். அடுத்த ஆண்டிலாவது நாம் சந்திப்போம். எமது சந்திப்புக்கள் மிகவும் ஓர் மாபெரும் யுகத்தினை நோக்கி நாம் பயணிக்கும் நல்லதோர் படியாக அமையட்டும் என இறைமகனை பிரார்த்தித்து எனது மடலை நிறைவு செய்கின்றேன். தங்களுக்கும் மற்றும் எம் உறவுகளுக்கும் மலரப் போகும் இனிதான புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு தங்கள் சக உறவு
மட்டு நகரில் இருந்து
**யாழ் சர்மா/பன்னிலா**

அக்கா, உங்களையும் எங்களையும் தெரியாத நிலை அக்கா. ஆனாலும் உங்கள் கடிதம் கேட்டதால் மிகவும் சந்தோசம். எமது அமைப்பில் இருக்கும் அனைவரும் நலம். இதைப் போல் அக்கா நீங்களும் நலமாய் வாழவும் எல்லோருக்கும் பொதுவான இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

அக்கா மிக விரைவில் நாம் எல்லோரும் ஒன்றாக சந்திக்கும் காலம் வரும் என மிகவும் ஆவலுடன் எதிர் பார்ப்போரும் இருக்கின்றோம்.

பிறக்க இருக்கும் புதுவருடம் அனைவருக்கும் புதுமைகள் படைத்திடும் ஆண்டாக அமைந்திடவும். எம்மை ஒன்று சேர்த்திடும் ஆண்டாகவும் அமைந்திட வேண்டும். இனிய புதுவருட வாழ்த்துக்களும் உங்களுக்கும் எம்மைச் சார்ந்த உறவுகளுக்கும் உரித்தாகட்டும். என்றும் எம் புது உறவு தொடரட்டும்.

என்றும் அன்புடன்
**ஆர்.புதுமா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகிய கனவின் ஓவியம்

**21.04.2019**





வானின் நீல வண்ண [illegible]
மேகங்களில் - நான்
எழுதியவை [illegible]
என் உயிர் மூச்சு!



நீல வானில் - மேகங்கள்
வண்ணம் கொண்டு - ஓர்
வடிவம் வரைந்தேன் [illegible]
[illegible]
ஆனால் - [illegible]
தெரியும் அது என் - [illegible]
[illegible] என்று!

- உமாசங்கரி

ஓவியங்கள்
- உமாசங்கரி



**08.02.1997 - 11.07.2019**










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனம் நிறைந்த மல்லிகையான்




மீண்டும் முடக்கப்படுகிறது
மூச்சுக்கள்
......................
இருப்பது நிச்சயமற்ற நிலையில்
ஏப்ரல் 21 இன் பின்னரான
ஏப்ரல் 23 காலை
இன்றுதான் தெருவிற்கு வருகின்றேன்.

தெருவெங்கும்
மௌனம்
திராணியற்ற காற்றில்
திசை திசை அலையும்
கருப்புக் கொடிகள்

விழிப்பற்ற தெருக்கள்
அடுத்தடுத்து என்ன தகவலோ
என குசு குசுப்பாய்
குந்தியிருக்கும்
ஓரிரு
ஆட்டோக்கள்

விறு விறுப்புச் செய்தியாய்
சில இளைஞர் முகங்கள்

நான் வரும் வளியில்.
எங்கள் தெருவின் நடுப்பகுதியில்
முறிந்த வாழைகளின் ஊடாக
தெரிகிறது
அந்தக் குழந்தையின் வீடு

சிவப்பும் வெள்ளையும் கொண்ட
கூடாரம்
முன்னுக்கு கட்டப்பட்டுள்ளது.

இடுப்பில் கை ஊண்றி
எடுப்பாய் போஸ் கொடுக்கும்
குண்டுப் பையன் அவன்
கண்ணீர் அஞ்சலி பதாகையில்
சிரித்தபடி நிற்கிறான்

23.04.2019

# பீற்றர் வீட்டு வாசல்

வீட்டில் இருந்து நான் ஏறும்
எதிர்ப்புற ரோட்டில்
பீற்றரின் வீடு
"சேச்சிற்கு போன பீற்றர் இன்னும்
வீட்ட வரல்லியே"

பீற்றரின் அம்மா வாசலைப் பார்த்தபடி
மயங்குவதும் தெளிவதுமாகக் கிடந்தாள்.

"அவனது உடல்
இனித்தான் குடுப்பாங்க".

ஆஸ்பத்திரியில் இருந்து வந்த – என்
அண்ணா சொன்னார்.

பெற்ற வயிறுகள்
பற்றி எரிய
தெருவில் கட்டிய
இளம் குருத்து
வாழைகளை
வளர்ந்த மாடுகள்
விழுங்கிக் கொண்டிருந்தன.

23.04.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தர" குறியீடுகளால் கழிக்கப்படும்

எதை உடுத்த ?
இன்று
இருப்பதை
இறுகப் பற்றியபடி
நிற்கிறேன்

ஏனெனில் நேற்று உடுத்தியது
இன்று புள்ளடியிடப்பட்டுவிட்டது.

துப்பாக்கிக்கு தடை போல
மது அருந்துதல் தடை போல
புகைத்தல் தடை போல
மதில்களில் சிறு நீர் கழித்தல்
தடைபோல
சிவப்புக் குறியீட்டின்
"தர" அடையாளத்தின் பின்னால்
என் ஆடைகள்.

முன்னரும் இப்படித்தான்......
இன்றைக்கு 15, 20 ஆண்டுகளுக்கு முன்,
"பின்னுக்கு வெட்டுப்போட்ட
பாவாடை தடை,
குட்டப் பாவாடை தடை
பெண்ணுக்கு ஜீன்ஸ்

தடை, தடை, தடை
எத்தனை துண்டுப் பேப்பர்கள்
நிலமெங்கும் விதைபட்டது

என்னதான் என்றாலும்
எங்கள் உடுப்பானது
கலாசாரத்தைக் கெடுப்பது
ஆண்கள் ஆண்மையை
தூண்டுவது
சமூக துஸ்பிரயோகத்தை
கொண்டு வருவது
இன்றோ
பயங்கரவாதமானது

உடையற்ற மனிசியாய்
நான் வாழ்ந்த
கற்காலம்
வரும்வரை
எதை நான் உடுத்த..

10.05.2019




# ஒன்று கூடல்

ஏப்ரல் 21 இன் பின்,
மாலைப் பொழுதொன்றில்

மூவின ஒற்றுமைக்கான
"இப்தார்" நிகழ்வு
பெரிய பள்ளி வாசலில்.

காலச் சுவரில்
கை கட்டிச் சாய்ந்தபடி
நான்

அவர்களே எண்ணிக்கொள்கிறார்கள்
தங்கள் வரவை.

மனித உடல்கள்
100 ஐத் தாண்டியதால்
திருப்தி.

இன்று – நிதர்சனம்.
நாளை – நினைவு தின நிகழ்வுகள்
ஆகும் இதுவும்,

என்ற நம்பிக்கையில்
ஓடும் கூட்டத்தில்
ஓடும்
என்னை
வெறுத்தும்
விமர்சித்தும்
காலிடை நசியும்
உண்மையை உதறியும்

கிறுக்கியபடி
பார்த்துக் கொண்டுள்ளேன்.

26.05.2019

**விஜயலட்சுமி சேகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனித நாளின் மணமகள்

-பஹ்மியா ஷரீப்

என் சின்னச்சிட்டே
ஏஞ்சல்...
குறும்புகளின்
குத்தகைக்காரியடி - நீ

உன் புன்னகைதானம்மா
நானணியும் பொன்னகை..

உன்
சிரிப்பொலிதானம்மா
நான் தினம்
உச்சரிக்கும்
ஸ்தோத்திரம்..

பூஞ்சிட்டே!
புலர்ந்திட்ட அன்றைய
பொழுதில்- நீயும்
புதுமலராய்
எழுந்தாயடி...

புனித நாளின் மணமகளாய்-
உனை
அலங்கரித்துக்
கொண்டாயடி...

சட்டையென்று
வந்தாலே
சண்டையும் சேர்ந்து
வரும்
நமக்கிடையில்..
அன்றும் அழுது
அடம்பிடித்தாய்
சிவப்பில்தான்
நீ...சிறப்பென்று...

வெள்ளைதான்
அழகென்றேன்..
வீண்வாதம் வாதம்
வேண்டாம் என்றேன்..
தயக்கமாய் அணிந்து
கொண்டாய்..
தேவதையாய் வந்து
நின்றாய்...
துள்ளி வரும்
புள்ளிமானாய் -என்
கைபிடித்தே
கூடவந்தாய்.-
ஆலய வாசலெங்கும்
அலையலையாய்
இளந்தளிர்கள்...
ஓடிச்சென்றே
அணைத்துக்கொண்டாய்..

ஆடிக்களித்தே
அகமகிழ்ந்தாய்
என் செல்லக்கிளியே சில
அடிகூட
செல்லவில்லையடி நான்..-
உன்
விரல்பிடித்த சூடும்
கூட என்
உள்ளங்கையில்
மாறவில்லை.

தூக்கி வீசப்பட்டாய் ..
இடி
விழுந்த ஓசையுடன்
என்
காலடியில் தரை
விழுந்தாய் ....நான்
கண்மூடித்திறப்பதற்குள்.-
நீ
கண் மூடி
பிரிந்துவிட்ட
நியாயமென்ன?

மரத்துப்போன
மூளையாலும்
திமிர்த்துப்போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரங்களாலும் -உனை
தடவித்தடவிப்பார்க்கிறேன்..

சிவப்புச்சட்டையில்
நனைந்தபடி
சிலிர்த்துக்கிடக்கிறாய்..
இறுதியில்
சிவப்பணிந்து எனை
வென்று விட்டாயே என்
செல்ல மகளே!...

திக்பிரமை
பிடித்தவளாய்
தலைவிரித்த
கோலமதாய்
கடந்து விட்ட
முழுப்பொழுதும்
இழந்து விட்ட
மகளுக்காய் இதையே
சொல்லிச்சொல்லி
அழுகின்ற என்
உயிர்த்தோழி !...

என்ன சொல்லி நான் உனைத்
தேற்றுவேனடி?

இணைந்தே நாம்
கொண்டாடும்
பெருநாள்
பொழுதுகளும்
நத்தார்
நினைவுகளும்
நனைந்த கண்களுக்குள்
நகராமல் நிற்குதடி.
முக்காடிட்டு நான் உன்
வீடு வந்தால்,
'ஆராதனைக்கா ஆண்டி
வந்தீர்கள்?'
எனக்கேட்பாள் உன்
பிஞ்சு மகள்...

அவள் கண்களுக்குள்
இருக்கவில்லையடி நம்
முக்காட்டில்
முரண்பாடு...

எங்கிருந்தோ வந்த சில
காட்டேரிக்கும்பலுக்கு
மகளைக் காவு
கொடுத்தவள்- நீ மட்டும்
இல்லையடி நானும்தான்...

குறையொன்றும்
வைத்ததில்லையடி
நானுனக்கு...
கனவிலும் சிறு கேடு
நினைத்ததில்லை...
குருவிகளாய்
கூடிவாழ்ந்தோம் -
அயலவராய்...
கயவர்கள் கல்லடித்து
கலைத்துவிட்ட
கோரமென்ன?

குற்றமொன்று
புரியாமலே தலை
குனிந்து
நிற்கின்றேன்
உன்முன்னே..

உன் வலியை என் வலியாய்
உணர்கின்றேன்.

மௌனமாய் இதயம்
வெடித்து
அழுகின்றேன்...
இருகரம் ஏந்தி இறைவனை
இறைஞ்சுகின்றேன்.....
உன் இதயத்திற்கு
அமைதியை
வேண்டுன்கிறேன்..

என் கவலைகளை
காணிக்கையாய்
செலுத்துகின்றேன்..

என் கண்ணீரை கருணை
கொண்டு ஏற்றுக்கொள்
தோழி...

மீண்டுமொரு கரிநாள்
இம்மண்ணில்
இனியும் விதைத்திட
வழிசெய்யோம் தோழி..நம்
தாய்நாடு
தழைத்தோங்க தவறாமல்
உழைத்தவர்கள் நாம்...
தளராமல் பயணிப்போம்..
தடைகளை
களைந்திடுவோம்..

நிரந்தர சமாதானம்
நிலைத்திட வழி
சமைப்போம்..
வீறு கொண்டு வா தோழி..
வேண்டாத சக்திகளை
விரட்டியே
துடைத்தெறிவோம்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்வோம் சமூக ஒற்றுமைக்காக ஒன்றிணைவோம்

## அனர்த்த முகாமைத்துவ பெண்கள் கூட்டமைப்பு

**23 ஏப்பிரல் 2019 மட்டக்களப்பு**

ஈஸ்டர் ஞாயிறு காலையில் கொச்சிக் கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் மக்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கச் செய்த குண்டு வெடிப்பிலிருந்து மாலை 4 மணி வரையுள்ள 7 மணித்தியாலங்களில் 290 மரணங்களை ஏற்படுத்தி 500 இற்கும் மேற்பட்டோரைக் காயமடையச் செய்த, தலைநகரிலும் அதன் அண்டிய பகுதிகளிலும் மற்றும் கிழக்கில் மட்டக்களப்பு நகர் மத்தியில் உள்ள சீயோன் தேவாலயத்திலும் நிகழ்ந்த 9 தொடர் குண்டுவெடிப்புகள் எமது நாடு முழுக்க பெரும் சோகத்தினையும் அதிர்ச்சினையும் ஏற்படுத்தியுள்ளது.

எமது நாட்டில் இந்த மிலேச்சத்தனமான தாக்குதலில் இறந்த அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் இறப்பினால் பாதிக்கப்பட்டு துயரிலுள்ள அனைவ ருக்கும் ஆதரவையும் கிழக்கைச் சேர்ந்த அனர்த்த முகாமைத்துவ பெண்கள் கூட்டமைப்பு தெரிவிக்கின்றது. குறிப்பாக மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தில் நிகழ்ந்த வெடிப்பில் கொல்லப்பட்ட சிறுவர்கள், பெண்கள், ஆண்கள் அனைவரதும் ஆத்ம சாந்திக்காக எமது பெண்கள் கூட்டமைப்பு பிரார்த்திப்பதோடு அவர்களது குடும்பங்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும் எமது மனப்பூர்வமான இரங்கலையும் ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறது. இத்தகைய மனித நாகரீகத்தைத மறுதலிக்கின்ற இந்த கொடூர தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றது.

கிறிஸ்தவ சமயம் இனத்துவப் பிளவுகளின்றி எல்லா இன மக்களையும் ஒன்றிணைக்கின்ற மார்க்கமாகும். இவ்வாறான அழகிய போதனையை வழங்குகின்ற சமயத்தில் திருநாளில் நிகழ்த்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலானது இந்நாட்டில் வாழுகின்ற சகல இன மக்களையும் பெரும் துயரத்தில் ஆழ்த்தி உள்ளது. இந்தத் தொடர் குண்டுவெடிப்புகளில் உயிர் இழந்தவர்களில் தமிழர்கள் சிங்களவர்கள் முஸ்லிம்கள் பறங்கியர்கள் என அனைத்து இன மக்களும் அடங்குகின்றனர். இத்தொடர் குண்டு வெடிப்பானது மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் அச்சத்தையும் இச்சம்பவத்தின் சூத்திரதாரிகள் தொடர்பான பல்வேறு சந்தேகங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது. இத்தாக்குதலின் தொடரில் இன முறுகல்கள் ஏற்படாத வண்ணம் மக்களை வழிநடாத்துமாறு அரசாங்கத்தை வேண்டிக் கொள்கின்றோம்.

அத்தோடு சகல இனத்தவர்களும் கலந்து வாழும் கிழக்கில் இத்தகைய தாக்குதல் இடம் பெற்றமைக்கான பின்னணி என்ன என்பதையும் ஆழ்ந்து சிந்திக்குமாறு கரிசனையுள்ள சமூக ஆர்வலர்களையும் சமயத் தலைவர்களையும் தொண்டு நிறுவனங்களையும் மற்றும் ஊடகவியலாளர்களையும் நாம் வினயமாக வேண்டிக் கொள்கின்றோம்.

ஏற்கனவே நைந்துபோயிருக்கும் இனத்துவ உறவுகள் மேலும் பிளவு படாமலிருக்க நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். சர்வமதத் தலைவர்களும் நிறுவனங்களும் விரைவில் எம்மத்தியில் பரவிவரும் இந்த ஐயம் கொண்ட சூழ்நிலையை கட்டுப்படுத்த முன் வருவார்கள் என திட்டவட்டமாக நம்புகின்றோம்.

வெவ்வேறு இனத்தை மதத்தை நாம் சார்ந்திருந்தாலும் பெற்ற பிள்ளைகளையும் உடன் பிறந்த சகோதரர்களையும் சகோதரிகளையும் பெற்றோர்களையும் இழந்து தவிக்கும் உள்ளங்களின் இழப்பின் வலியினை ஆழமாக புரிந்து கொள்ள முடிகின்றது.

80களிலிருந்து கிழக்குக் கரையில் ஓடிய இரத்தத்தின் வரலாற்றை அறிந்தவர்கள் நாங்கள். மேலதிகமான ஒடுக்குமுறைச் சட்டங்கள் உருவாக்கப்படுவது இத்தகைய நிகழ்வுகளுக்குத் தீர்வாக அமையாது என நாம் திடமாக நம்புகின்றோம். மனிதாபிமான ரீதியிலான எமது உறவுகளும் ஆதரவுகளுமே முரண்பாட்டிற்கான நீண்டகால தீர்வாக அமையும். கிழக்கில் மீண்டும் அமைதிக் குறைவோ இனத்துவ நெருக்கடிகளோ அன்றான வாழ்வின் முடக்கமோ ஏற்படாத வண்ணம் நடந்து கொள்ளுமாறு அனைத்து சமூக மக்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

- தெற்கிலும் கிழக்கிலும் நிகழ்ந்த தாக்குதல்களில் கொல்லப்பட்டோருக்கு எமது அஞ்சலி.
- அவர்களது குடும்பத்திற்கும் நண்பர்களுக்கும் எமது அரவணைப்பு
- இனத்துவ நட்புகளை வளர்க்கவும் சகோதரத்துவத்தை பாதுகாக்கவும் ஒன்றிணையுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த ஈஸ்டர் ஞாயிறன்று இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள தேவாலயங்கள் மற்றும் உல்லாச விடுதிகள் உட்பட ஒன்பது இடங்களில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களால் 290இற்கு அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர். இத் தாக்குதல்கள் நாட்டின் சகல மக்களையும் ஆழ்ந்த கவலைக்குள்ளாக்கியுள்ளதுடன் மக்கள் மத்தியில் அச் சத்தையும் நம்பிக்கையின்மையையும் உருவாக்கியுள்ளது.

சமதை பெண்ணிலைவாத குழுவினரான நாம் உயிரிழந்த அனைவருக்குக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எமது ஆதரவையும் அன்பையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்தவெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து நாட்டில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் நாட்டில் சமாதா னத்தை ஏற்படுத்தவும் அரசினால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுள் பலநடவடிக்கைகள் மக்களின் பாதுகாப்புக்காகவும், அச்சத்தைப் போக்குவதற் காகவும் எடுக்கப்பட்டிருப் பினும் ஒரு சில நடவடிக்கைகள் மக்களில் ஒரு பகுதியினரை அதிலும் பெண்களை எதிர்மறையாகப் பாதித்துள்ளதையிட்டு நாம் மிகவும் மனம் வருந்துகின்றோம்.

குறிப்பாக பாதுகாப்புக் காரணங்களுக்காக முகத்தை யாரும் மறைக்க கூடாது என்ற தடையைப் பயன்படுத்தி புர்கா மற்றும் நிகாப் அணியும் முஸ்லிம் பெண்கள் மீது காட்டப்படும் பாரபட்சங்களும், முன்வைக் கப்படும் அழுத்தங்களும், அவர்கள் பொதுவெளிகளிலும் வேலையிடங்களிலும் எதிர் கொள்ளும் சவால்களும், எதிர்ப்புக்களும் எமக்கு மிகுந்த கவலையை உண்டு பண்ணியுள்ளன.

இலங்கை பன்மைத்துவ அடையாளங்களைக் கொண்டவர்கள் வசிக்கும் நாடு ஆகும். புடவையை இந்திய முறையிலோ கண்டிய முறையிலோ உடுத்தல், புர்கா அணிதல், சட்டை அணிதல், தாலி கட்டுதல், காப்பு அணிதல், மெட்டி அணிதல், பூ வைத்தல், பொட்டு வைத்தல், தலை முடி வளர்த்தல், என பல பெண்கள் இவற்றைத் தமது சுயதெரிவாகவும், பலர் கட்டாயத்தின் பேரிலும் செய்து வருகின்றனர். விரும்பிய மதத்தை பின்பற்றுவது அல்லது பின் பற்றாமல் இருப்பதும் போன்றே ஆடைத்தெரிவும் ஒரு மனிதரின் தனிப்பட்ட விருப்பம் சார்ந்தது. இது தனிமனித உரிமையாகும்.

எமக்கிருக்கும் தெரிவுகளுக்கான வரையறையை இன-மத மானம், மரியாதை, கௌரவம் என்ற காரணங்க ளுக்காகவோ தேசிய பாதுகாப்பு என்ற காரணத்துக்காகவோ குடும்பங் களும், சமூகமும், மத நிறுவனங்களும் நிர்ணயிப்பதை நாம் விரும்பவில்லை.

பாதுகாப்பு சார்ந்த விடயங்களில் பெண்க ளுக்கும், பெண்களின் ஆடைகளுக்கும் இருக்கும் தொடர்பை விட உண்மையான, ஆழமான வேறு காரணிகள், ஒருவருக்கொருவர் துவேசத்தை விதைத்தலும் பரப்புதலும், வளங்களுக்கான போட்டி, லஞ்சம் ஊழல் போன்ற பல்வேறு காரணிகள் இருப்பதை சமூகங்களும் அரசும் புரிந்து கொண்டு அவற்றை முதன்மையாகச் சீர் செய்ய வேண்டும்.

பெண்கள் உரிமையையும் வன்முறைகளற்ற வாழ்வையும் விரும்பும் பெண்நிலைவாதிகளான நாம், பாதுகாப்புக் காரணங்களுக்காக முகத்தை மூடக்கூடாது என்ற அரசின் தடையைக் காரணங் காட்டி முஸ்லிம் சகோதரிகளுக்கு ஏற்படுத்தப்பட்டு வரும் இடைஞ்சல்களுக்காக நாம் மனம் வருந்துகின்றோம்.

இந்த நாட்டில் வாழும் அனைத்துப் பெண் களும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் இதே விதமான தடைகளால் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றோம், அச்சுறுத்த படுவோம் என்பதை உணர்ந்துள்ளோம்.

அந்தவகையில் வன்முறையற்ற வாழ்வை விரும்பும் நாம் எங்கள் சமூகங்களிடமும், அரசிடமும் பின்வரும் கோரிக்கைகளை முன் வைக்கின்றோம்.

எமது பண்பாட்டிலோ எமது விருப்பத்தெரிவு களிலோ யாரும் தலையிடக்கூடாது என நாம் விரும்புவது போல, பிறருக்கும் விருப்பம், தெரிவு உண்டு என்பதை நாம் மதிக்க வேண்டும்.

தனிப்பட்ட அல்லது குழு வெறுப்பு விருப்புக் களை இந்த சந்தர்ப்பத்தைப் பாவித்து பாதுகாப்பு என்ற பெயரில் இன்னொருவரிலோ, குழுவிலோ காட்ட வேண்டாம்.

மற்றவர்களது பண்பாட்டை விமர்சித்தல், அவர்களின் தெரிவுகளுக்கு தடைவிதித்தல் போன்ற செயல்களால் சமூகங்களுக்கிடையிலான சகிப்புத் தன்மையை இல்லாமல் செய்வதையும் முரண்பாடுகளை உருவாக்குவதையும் நிறுத்தவும்.

மனிதர்களான நாம் அன்பு, புரிந்துணர்வுடன் அனைவரும் ஒற்றுமையாக வன்முறையற்ற வாழ்வை வாழக்கூடிய இலங்கையை உருவாக்குவதில் நாட்டிலுள்ள சகல மக்களின் முழுமையான ஒத்துழைப்புடன் செயற்படுமாறும்,

இத்தகைய பாரபட்சங்களை முடிவிற்கு கொண்டுவர தேவையான செயற்பாடுகளை துரிதப் படுத்துமாறு அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.

தீவிரவாத வன்முறை மனப்பாங்குகளைத் தோற்று விக்கும் உண்மையான மூலகாரணிகளைக் கண்டறிந்து சுய-அரசியல் லாபங்களற்ற நிலையான தீர்வுகளை நோக்கி நாட்டை வழிநடத்துமாறு அரசையும் அரசியல்வாதிகளையும் கேட்டுக் கொள்கின்றோம்.

நாம் அன்பு, நம்பிக்கை, அடிப்படையிலான அகிம்சையான வன்முறையற்ற உறவுகளை உருவாக்கிக் கொள்ளவும், பேணவும் வாழவும், எமது சந்ததிகளுக்காக விட்டுப் போகவும் விரும்பு கின்றோம்.

**சமதை பெண்ணிலைவாதக் குழு**
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# HUMAN ELEVATION ORGANIZATION-HEO
# மனித எழுச்சி நிறுவனம்
# මානව නංවාලීමේ සංවිධානය

Regd. EP/AM/AD/DS/NGO/30 Telephone No: 067 5672048, E-mail: heo.ngo2006@yahoo.com


25/04/2019

## பயங்கரவாத கூலிப்படையின் காட்டுமிராண்டித்தனமான குண்டுத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். பாதிப்புக்குள்ளானவர்களிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களும் பிரார்த்தனைகளும்

### மனித எழுச்சி நிறுவனம் (HEO) — அட்டாளைச்சேனை

மட்டக்களப்பு, கொழும்பு மற்றும் நீர்கொழும்பு பகுதிகளில் தேவாலயங்கள் மீதும் ஹோட்டல்கள் மீதும் நடாத்தப்பட்ட மனிதத்தைக் கொன்றொழித்த பயங்கரவாத கூலிப்படையின் காட்டுமிராண்டித்தனமான குண்டுத் தாக்குதல்களை மனித எழுச்சி நிறுவனம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இயேசுபிரான் உதித்த ஞாயிறு தினத்தில் தேவாலயங்களில் இறை வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பெண்கள், குழந்தைகளுடன் சுற்றுலாப் பயணிகள் உட்பட 316 அப்பாவிப் பொதுமக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளதுடன் 500 ற்கும் அதிகமானோர் பலத்த காயங்களுடன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர். இச் சம்பவம் நிகழ்ந்ததை அறிந்ததிலிருந்து எம் நெஞ்சங்கள் கனத்து கண்கள் கண்ணீர் வடிக்கின்றது. பாதிப்புக்குள்ளானவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களும், பிரார்த்தனைகளும்.

இது ஈனப்பிறவிகளின் செயலாகும். இவ் ஈனச் செயலை செய்தவர்களை இலங்கையாராகிய நாங்கள் ஒரு போதும் சகித்துக் கொள்ளவோ மன்னிக்கவோ மாட்டோம், இதனை செய்தவர்கள், இதற்கு துணை நின்றவர்கள் இதற்கு ஆதரவானவர்கள் என அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கொடூரமாக தண்டிக்கப்பட வேண்டும். இவர்களுக்கு வழங்கும் தண்டனையானது அனைவருக்கும் பாடமாக அமைய வேண்டும்.

இவ்வாறான தாக்குதல்கள் நடக்கக்கூடும் என முன்னராகவே பல்வேறுபட்ட புலனாய்வுகள் குறிப்பிட்டிருந்ததாக பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகளில் நாம் அறிந்தோம். இவ்வாறு இருந்தும்கூட இலங்கை அரசு சம்பவத்தினை தடுத்து மக்களைப் பாதுகாக்க எந்த முயற்சியும் எடுக்காமையானது இலங்கை வாழ் மக்களாகிய எங்களது மனங்களில் எமது பாதுகாப்பு தொடர்பான உள் அச்சத்தினை தோற்றுவித்துள்ளது. எமது நாட்டின் அரசாங்கம் விரைந்து இந்த தீவிரவாதத்தினை வேரறுப்பதும், தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதனூடாக எமது மனங்களில் உள்ள அச்சங்களை நீக்கி சுதந்திரமாகவும், சமாதானமாகவும் வாழ வழிவகுக்க வேண்டும். அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்களும் சிவில் சமூக அமைப்புக்களும் உச்சபட்ச ஒத்துழைப்பினை வழங்குவதன் மூலமாகவே இந்த பயங்கரவாதத்தினை விரைந்து வேரறுக்க முடியும்.

இது பயங்கரவாத கூலிப்படைகளின் செயலாகும். இதற்கு எந்த இனமோ, மதமோ ஆதரவானதல்ல. இதனைக் காரணமாக கொண்டு குறிப்பாக முஸ்லிம்களையோ அல்லது இலங்கை வாழ் வேறு எந்த இனத்தவர்களோயோ அல்லது மதத்தவர்களோயோ அநியாயமாக பழிவாங்கப்படுதல் தடுக்கப்பட வேண்டும். இச் சம்பவத்திற்கும் சாதாரண பொதுமக்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை. எந்த மதங்களும் வன்முறையினைத் தூண்டவில்லை. வன்முறையாளர்கள் எந்த மதத்தவர்களும் அல்லர். வன்முறையாளர்கள் பணத்திற்காகவும், அதிகாரத்தினை கையில் எடுக்கத்துடிப்பவர்களின் நிகழ்ச்சி நிரல்களிற்காகவும் கூலிப்படைகளாக செயற்படுகின்றனர் என்பது உலகறிந்த உண்மை. எனவே நாம் மீண்டும் மீண்டும் வேண்டிக்கொள்வது, பொதுமக்கள் யாரும் இனங்களுக்கு எதிரான வன்முறையினைக் கையில் எடுக்காது அரசிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அரசானது பொது மக்கள் யாரும் அநியாயமாக பாதிக்கப்படாது பாதுகாக்கப்படல் வேண்டும். இப் பயங்கரவாதத்தினை உடனடியாக முறியடித்து இலங்கை மக்கள் அனைவரது பாதுகாப்பினையும் அரசானது உறுதிப்படுத்த வேண்டும் என நாம் வேண்டிக் கொள்கின்றோம்.

K. நிருமல் சிவறமட் -
M.C.I. உதுமாலெவ்வை -
M.N.M. நஸீல் -
A.M. உவைஸ் -
M.I.M. Arshath -
Ms. Fathima Rugna -

HUMAN ELEVATION ORGANIZATION HEO Thaikkanagar Addalaichenai Regd: EP/AM/AD/DS/NGO/30 மனித எழுச்சி நிறுவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வேற்றுமைகள் புலப்படும் அளவிற்கு ஒற்றுமைகள் ஏன் தெரிவதில்லை?

**வ**ணங்கும் கடவுள், பேசும் மொழி, உடுக்கும் உடை என ஒவ்வொருவரும் பிறந்ததன் பின்னரும், காலத்துக்கு காலமும் எமக்கு அடையாளங்கள் வழங்கப்படுகின்றன. அந்த அடையாளங்களை நாம் மாற்றிக் கொண்டேதான் இருக்கின்றோம். எங்களது மூதாதையர் கொண்டிருந்த அடையாளங்கள் எதையும் அப்படி அப்படியே நாம் இன்று கொண்டிருக்கவில்லை. நாம் கொண்டிருக்கும் அடையாளங்களையும் எமது வாழ்க்கைக் காலத்திலும் நாம் மாற்றிக் கொண்டேதானிருக்கின்றோம்.

யாரும் தமது வாழ்க்கைக் காலம் முழுவதும் ஒரே கடவுளை ஒரேவிதமாக ஒரே கோயிலில் வணங்கிக் கொண்டும் ஒரேவிதமாக ஒரே மொழியைப் பேசிக் கொண்டும் இருப்பதில்லை. இவை அனைத்தும் மாறிக் கொண்டேதான் வந்துள்ளன. உடை மதம் மொழி என வெளித் தெரியும் விடயங்களினால் ஒரு குழுவாக இணையும் எங்களுக்கு எங்களை உண்மையாக இணைக்கும் அடிப்படையான விடயங்களின் அடிப்படையில் ஏன் இணைய முடிவதில்லை?

மனிதர், இயற்கையின் நியதிகளைக் கடந்து பரிணாமம் பெற்று இந்த வடிவத்துள் வந்தோர், ஏனைய விலங்குகளிலிருந்து வேறுபட்ட ஒரேவிதமான அடிப்படை மனித உயிரியல் அமைப்புக்களைக் கொண்டவர்கள்.

உலகின் எந்தப்பகுதியிலிருந்தாலும் எந்த 'இனம்', மதம், மொழிக்குரியவராயினும் இரத்தப் பிரிவுகள் பொருந்தின் ஒருவரது இரத்தத்தை ஒருவருக்கு வழங்கவும், ஒருவரது உடற்பாகங்களை இன்னொருவருக்குப் பொருத்திக் கொள்ளவும், ஒருவருடன் ஒருவர் நட்பும் காதலும் காமமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவும், ஆணும் பெண்ணுமாக இணைந்து அடுத்த சந்ததியை உருவாக்கவும் கூடிய ஒரே இனத்தவர் மனித இனத்தவர்.

இந்தச்சின்ன இலங்கைத்தீவினுள் வாழும் நாங்களும் எந்தவிதமான தூய ஒற்றை இன மத மொழி அடையாளங்கள் அற்றவர்கள். இன்றுள்ள பல்லின, பல்மத, இன மதமற்ற என்ற பல்தன்மையே எமது அழகு, எமது பலம். இது நாளை இன்னும் பலவிதமாக பரிணமிக்கும். எங்களை நான்கு பெட்டிகளுக்குள் போட்டுப் பிரித்து ஒன்றை யொன்று வெறுக்கவும் முரண்படவும் வைக்கும் கேவலமான முன்னெடுப்புக்களை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.


வன்முறையாளர்களை உருவாக்கும், வளர்த்தெடுக்கும், காப்பாற்றும் எதனையும் நாம் சகித்துக்கொள்ள மாட்டோம்.

மனிதராக எமக்குள் உள்ள பாரிய பொதுத் தன்மைகள் மறைக்கப்பட்டு 'தெரிவு செய்யப்பட்ட' குறுகிய குழு அடையாளங்களால் மனிதரைப் பிரிக்கும் சுயநல அதிகார விரும்பிகளைத் தனிமைப்படுத்துவோம்.

நாம் தெளிவாக இருப்போம்!

22.04.2019




சாதிப் பெருமையைக் காப்போம் என்று வன்முறை புரியலாம் மொழியைக் காப்போம் என்று வன்முறை புரியலாம் இன மானத்தைக் காப்போம் என்று வன்முறை புரியலாம்
மதங்களைக் காப்போம் என்று வன்முறை புரியலாம்
அகிம்சையைக் காப்போம் என்றால் என்ன செய்யலாம்?

23.04.2019

உனக்குத் தேவையான அடையாளங்களை
என் மீது போர்த்து
தாவணியாய், சேலையாய்
முக்காடாய் முழு நீளமாய்
வியாபாரத்துக்குத் தேவையெனில்
முழு நிர்வாணமாயும்,
எனது ஆடை
உன்னால் என்மீது விதிக்கப்படும்
அதிகாரத்தின் குறியீடு

நானோ
வெயிலிலும் குளிரிலும்
துயரிலும் மகிழ்விலும்
இதமாய் உடனிருக்கும்
போர்வையைத் தேடிக்கொண்டிருக்கின்றேன்.
மகனே உன் பார்வையிலிருந்து
என்னுடலை மறைப்பதற்காக அல்ல
என் மனம் அவாவும் விடுதலையின் குறியீடாக!
29.04.2019

**கமலா வாசுகி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## என் அன்பிற்கும் பாசத்திற்குமுரிய கிறிஸ்தவ உடன்பிறப்புகளுக்கு, முஸ்லிம் சகோதர சகோதரிகள் சார்பாக உங்கள் சகோதரி எழுதிக்கொள்வது...

கடந்த 18 வருடகாலங்களாக இந்த நாட்டில் உண்மையான சமாதானமும், இனங்களுக்கிடையிலான ஒற்றுமையும், சுபீட்ஷமும் மலரவேண்டுமென அயராது பாடுபட்டவர்களில் ஒருத்தியாய் நின்று, இந்த மடலினை உங்களுக்கு வரைகின்றேன்.

இதுவரை காலமும் எத்தனையோ கிறிஸ்தவ சகோதர சகோதரிகளுடன் சமூகக்களத்தில் ஒன்றாக பயணித்திருந்தாலும் இப்படியொருகனதியான மனோநிலையினை நாம் இதுவரை அனுபவித்ததில்லை. அதே கனத்த மனதுடனும் கண்ணீருடனும் இதனை எழுதுகின்றேன்.

கடந்த 21.04.19ம் திகதி கிறிஸ்தவ தேவாலயங்களிலும் பிரபல ஹோட்டல்களிலும் நடாத்தப்பட்ட மிலேட்ச்சத்தனமான, பயங்கரவாத தாக்குதல்களை முஸ்லீம்களாகிய நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இத்தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

இப்பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னணியில் சில முஸ்லிம் பெயர்தாங்கிகளின் பெயர்கள் வெளிவருவதைக் கண்டு மிகவும் வெட்கித்தலை குனிகிறோம். வேதனைப் படுகின்றோம்.

உண்மையில் இஸ்லாம் சாந்தியினையும் சமாதானத்தையும் அதிகம் போதிக்கின்ற, அதனை கட்டாயமாக்கியுள்ள மார்க்கமாகும். அதிலும் குறிப்பாக நாம் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் (இயேசு பிரான்)அவர்களை எமது இறை தூதர்களில் ஒருவராக ஏற்றுக் கொண்டு, கிறிஸ்தவ மக்களை எமது சகோதரர்களாக மதித்து வாழ்கின்றவர்களாகும்.

ஆனால் இஸ்லாத்தின் பெயரால் மிகப் பிழையாக வழிநடாத்தப்பட்ட சில காட்டுமிராண்டித்தனமானவர்களே இப்படுபாதக செயலினைச்செய்துள்ளனர். நிச்சயமாக முஸ்லிம்களைப் பொறுத்த வகையில் இப்பயங்கரவாதிகள் இஸ்லாத்தை விட்டும் வெளியேறியவர்களாவர். முஸ்லிம்களாகிய நாம் இவர்களுடைய இம் மிலேட்சத்தனமான நடவடிக்கைகளை இஸ்லாத்தின் அடிப்படையில் மிகவும் கண்டிப்பதுடன் இவர்கள் அனைவரும் சட்டரீதியாக தண்டிக்கப் படவேண்டு மென்பதையும் வலியுறுத்திச் சொல்கின்றோம்.

இக்கொடியவர்களின் செயலால் உண்மையில் முஸ்லிம்களாகிய நாம் மிகுந்த மன உளைச்சலுக்கும், தலைகுனிவிற்கும் ஆளாகியுள்ளோம்.

இஸ்லாத்தின் பெயரால் சில விஷமிகள் மேற்கொண்ட இப்பயங்கரவாதச் செயலினை சாதகமாக பயன்படுத்தி இன்று நாடுபூராகவுமுள்ள முஸ்லிம்கள்மீது பல்வேறுபட்ட அடக்குமுறைகளையும், இன்னல்களையும் இனவாத சக்திகள் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளன.

ஆனால் இவ்வாறான இக்கட்டான சூழலிலும் பாதிக்கப்பட்ட மக்களாகிய கிறிஸ்தவ மக்களின் பொறுமையும் கருணையும் எம்மை பிரமிக்கச் செய்துள்ளது. கிறிஸ்தவ மதத்தலைவர்களின் பொறுப்பான நடவடிக்கைகளும் முறையான வழிகாட்டல்களும் உண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு பெறும் ஆறுதலைத்தருகின்றது.

எனவே எமது மதத்தின் பெயரால் உங்களுக்கு இழைக்கப்பட்ட இவ்வநீதிக்காக முஸ்லிம்கள் என்ற வகையில் நாம் எமது மனமார்ந்த மன்னிப்பினை உங்களிடம் வேண்டி நிற்கின்றோம். உங்களது வலிகளையும் வேதனைகளையும் முழுமையாக புரிந்து கொண்டவர்களாக எமது ஆழ்ந்த அனுதாபங்களை உங்களுக்கு காணிக்கையாக்குகின்றோம். பாதிக்கப்பட்டு சிகிச்சையடைந்து வருகின்ற அனைவரும் விரைவில் குணமடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

எமது சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமை மென்மேலும் பலப்படவும், இந்த நாட்டில் எந்த மதத்தின் பெயராலோ, இனத்தின் பெயராலோ தலைதூக்கும் அத்தனை இனவாதங்களையும், பயங்கரவாதங்களையும் முழுமையாக துடைத்தெறியவும்.அதற்காக பாடுபடவும் உங்களுடன் ஒன்றிணைய சித்தமாயுள்ளோம்.

விரைவில் உங்கள் அனைவரையும் நேரில் சந்திக்கும் ஆவலுடன்...

மிகுந்த அன்புடனும் நேசத்துடனும் உங்கள் அன்புச்சகோதரி..

**பஹ்மியா ஷரீப்**

---

ஏலோலோ ஏலோலோ ஏலோலோ ஏலோலோ
சொல்ல வாரோம் சொல்ல வாரோம்
முன்னர் காலக் கத சொல்ல வாரோம்
கேட்க வாங்க(கதை) கேட்க வாங்க
நாங்க சொல்லும் - கதைய நீங்க

கடலே இரையாதே
கற்கிணறே பொங்காதே
நிலவே எறியாதே
எங்க - நினைவுகள மீட்கும் மட்டும்

சொல்ல வாரோம் - சொல்ல வாரோம்
ஒன்றாயிருந்த கதையை நாங்க
தோல்விகளோ வெற்றிகளோ
கூடி இருந்த வாழ்க்கை கண்டோம்

தோட்டம் போட்டு நாற்று நட்டு
கதிரறுத்து சூடு வெச்சி
சுமை சுமந்து சுகம் கண்டோம் ....
பகிர்ந்துண்டு வாழ்ந்திருந்தோம்
பாலெடுக்க வண்டியில பனி விழுற காலையில
பட்டியடி செல்வோம் நாங்க
பால் தயிரும் வாங்கிடுவோம்.



வட்டிலப்பம் - நான் தரவா
பாயாசமும் - நான் தரவா
பள்ளிவாசல் - கஞ்சி வேணும்
சக்கரைப் பொங்கலும் தான் வேணும்

பாய் இழைச்சி – உம்மா தந்தா
அரிசியும் மீனும் - அம்மா தந்தா
கஜூ உடைச்சு உம்மா தந்தா
விரால் மீன் கறி அம்மா தந்தா

அவ்வம்மாவும் ராசம்மாவும்
களப் பிச்ச வாங்கி வந்து
ஒன்னாக சேந்திருந்து
ஊரு வம்பு பேசுவாக
உம்மாவுக்கு வலியெடுத்தா,
ராசம்மா ஓடி வந்தா
ராசம்மா துயர் கண்டா
அவ்வம்மா நோன்பிருந்தா


உங்க சொத்தை நாம் காப்போம்
உயிரையும் கூட நாம் காப்போம்
பெண்கள் நாங்கள் - அன்பாலே
உறவும் நட்பும் காத்து நிற்போம்

கட்டியணைச்சி கை கோர்த்து
கோலம் போட்டு
பிட்டும் தேங்காய்ப்பூவும் - போல
இருந்ததொரு எங்க காலம்
கொண்டாட்டமோ திண்டாட்டமோ
கூடியிருந்தோம் ஊருக்குள்ளே
வேண்டும் வேண்டும் அந்த வாழ்க்கை
மீண்டும் வேண்டும் எங்களுக்கு

**- தமிழ் முஸ்லிம் சிங்கள சகோதரிகள் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெருப்பாற்றைக்கடக்கப்
## பசான் பாடல்

நாங்கள் உங்களோடு இருப்போம்
நாங்கள் எங்களோடு இருப்போம்
கத்தியால் இருதயத்தைக் கிழித்தது போல
மூர்ச்சைப் போட்டு
கல்வாரி மலை நோக்கி நடந்த பயணத்தில்
மேரியைப் போல நடந்து சென்றாலும்
வரோனிக்கா போலவும்
மேரி மக்தலின் போலவும்
நாங்கள் நடக்கின்றோம்
நெருப்பாற்றை கடக்கின்றோம்
என்றாலும் எங்களுக்குள் ஒலிவ் மரத்தின்
இலையின் தளிர்கள் போலவும்
வாகை மரத்தின் மஞ்சள் பூக்கள் போலவும்
நெருப்புப் பூக்கள் போலவும்
நம்பிக்கை வளர்கிறது
மூன்றாம் நாளில் உயிர்ப்பை கண்ட
மக்தலின் போல
நாங்கள் உயிர்ப்பை காண்போம்
உயிர்ப்பு எப்போதும் எங்களோடு இருக்கும் ;
எத்தனை இறப்புக்கள்,
இழப்புக்கள் நேர்ந்தாலும்
மேரியைப் போலவும் மேரி மக்தலின்
போலவும் - நாங்கள்
நடக்கின்றோம்; நெருப்பாற்றைக்
கடக்கின்றோம் - என்றாலும்
ஒலிவ் மரத்தின் தளிர்கள் போலவும்
வாகை மரத்தின் மஞ்சள் பூப் போலவும்
நந்தியாவட்டை மரத்தின்
வெண்மலர்கள் போலவும்
முல்லைப் பூக்கள் போலவும் சுகந்தம் வீசும்
தோழமையை சேர்ந்து அன்பை ஊட்டி
நாங்கள் வளர்ப்போம்
வளர்வது என்றும் குறையாது
வெட்ட வெட்டத் தளிர்ப்பது போல
சீமேந்துப் பாதையின் வெடிப்புகளின் ஊடே
சின்ன பூக்கள் தளிர்ப்பது போல
கல்லின் இடுக்கில் புல் பூப்பது போல

கொங்கிறீட் சாலைகளின் இடையில்
நெருஞ்சிப்பூக்கள் போல
நாங்கள் நீண்ட பாலையையும்
நெருப்பாற்றையும் கடக்கிறோம்
பொதுங்கிப் போகாமல் நடக்கிறோம்
கடக்கிறோம்
நாம் உறவை வளர்க்கின்றோம்
எங்கள் அன்பு, எங்கள் உறவு வளர்கிறது
எங்களது பயணம் முடிவுறாதது ;

**- சித்திரலேகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**

இல. 4/1, தோமஸ் லேன்,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Suriya Women's Development Centre,**
No. 4/1, Thomas Lane,
Batticaloa,
Sri Lanka.

## வருடாந்த சந்தா - பெண்

**ஐரோப்பா, வட அமெரிக்கா,**
**அவுஸ்திரேலியா**
**US$ - 8**
**இந்தியா**
**ரூபா 500.00**
**இலங்கை**
**ரூபா 200.00**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் நடக்கின்றோம்
நெருப்பாற்றைக் கடக்கின்றோம்
ஒலிவ் மரத்தின் இலையின் தளிர்கள் போலவும்
வாகை மரத்தின் மஞ்சள்
நெருப்பு பூக்கள் போலவும்
நம்பிக்கை வளர்கிறது
நந்தியாவட்டை மரத்தின் வெண்மலர்கள் போலவும்
முல்லை பூக்கள் போலவும் சுகந்தம் வீசும்
சின்ன பூக்கள் தளிர்ப்பது போல
கல்லின் இடுக்கில் புல் பூப்பது போல
உயிர்ப்பு எப்போதும் எங்களோடு இருக்கும்

ISSN : 1391-6122

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org